Regd. No. M. 5984
Phone No. 21841

ஜனசக்தி

JANASAKTHI

ஆசிரியர்: ப. ஜீவானந்தம்

(வெளியூர் பதிப்பு)

மலர் 16 இதழ் 31] சென்னை 16-9-59 விகாரி ஆவணி 31உ புதன்கிழமை [4 பக்கங்கள் 7 காசுகள்

சமாதானத்தை பேணிக்காக்க முயல்வேன்



சென்னையில் நடந்த பாரதி விழாவில் சிவாஜி கணேசன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்

தமது அமெரிக்க விஜயம் குறித்து குருஷ்சேவ் விளக்கம்

ரஷ்ய ராக்கெட் சோஷலிஸ முகாமின் வெற்றி எனப் பெருமிதம்

மாஸ்கோ, செப். 14—

"சந்திரமண்டலத்தை எட்டிய சோவியத் ராக்கெட்டின் பிரதிமையை அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவருக்கு அளிப்பதில் நான் மகிழ்ச்சி கொள்வேன்" என்று சோவியத் பிரதமர் நிகிதா குருஷ்சேவ் நேற்று கூறினார். இந்தச் செய்தியை 'டாஸ்' செய்தி நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

"அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் நன் நோக்கத்தின்மீது எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அவர் என்னை அமெரிக்காவிற்கு வருகை தருமாறு அழைத்ததன் மூலம் சர்வதேச தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்கும், இரு நாடுகளின் உறவு பலப்படுவதற்கும் முயற்சி செய்கிறார் என்பது தெளிவான விஷயம். இவ்வுலகிலுள்ள எல்லா மக்களின் சமாதான பூர்வமான வாழ்விற்கு உறுதி அளிப்பதுதான் முக்கியமான விஷயமாகும்" என்றார்.

இருபெரும் சம்பவங்கள்!

அவர் மேலும் பேசுகையில், "அமெரிக்காவிற்கு விஜயம் செய்கின்ற இத்தருணத்தில் இரண்டு மிகப் பெரிய சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. சரித்திரத்திலேயே முதன் முறையாக சோவியத் யூனியன் சந்திரனுக்கு அண்டைவெளி ராக்கெட்டை அனுப்புவதில் வெற்றி கண்டது. இரண்டாவதாக மாமேதை லெனின் பெயர் தாங்கிய அணு விசையால் இயங்கும் பனி உடைப்புக் கப்பல் தம் பயணத்தை வெற்றிகரமாகத் தொடங்கியிருக்கிறது."

சோஷலிஸ முகாமின் வெற்றி!

சோவியத் அரசாங்கத்தின் சின்னத்தோடு முதன் முதலாக சந்திரமண்டலத்திற்கு ராக்கெட்டை அனுப்பிய தங்களது விஞ்ஞானிகள், என்ஜினியர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள் தொழிலாளர்களையெல்லாம் நினைத்து சோவியத் மக்கள் பெருமிதம் கொள்கிறார்கள்; மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறார்கள். ராக்கெட் சந்திரனில் இறங்கிவிட்டது என்ற செய்தியை மட்டில்லா மகிழ்வோடு வரவேற்கிறார்கள். இந்த வெற்றி சோவியத் மக்களின் வெற்றிமட்டுமல்ல, சோஷலிஸ முகாமின் பெருமித வெற்றியாகும். அணு விசையால் இயங்கும் பனி உடைப்புக் கப்பல் பயணத்தைத் தொடங்கியிருப்பதும் குறிப்பிடத் தக்க சம்பவமாகும். இதன் மூலமாக சோவியத் மக்கள் அணு சக்தியை சமாதானபூர்வமான ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கே தீர்மானித்திருக்கிறார்கள் என்பதை நிரூபித்துக் காண்பித்துவிட்டார்கள்,' என்று கூறினார்.

நாங்கள் தயார்!

குருஷ்சேவ் தொடர்ந்து கூறுகையில் "அணு சக்தியை சமாதான பூர்வமான ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துவதில் எல்லா நாடுகளோடும் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

மங்கோலிய பிரதமருக்கு பங்களூரில் மகத்தான வரவேற்பு

தொன்மை மிக்க இந்திய-மங்கோலிய தொடர்புபற்றி மைசூர் முதன் மந்திரி

பங்களூர், செப். 13—

சமாதானத்திற்காகவும், புதிய அணு ஆயுத யுத்தத்தை எதிர்த்தும் நாம் நடத்தும் போராட்டங்களில் நம்முடைய நட்புறவுப் பிணைப்புகளை பலப்படுத்திகொள்வதற்கு மங்கோலியாவுக்கும், இந்தியாவிற்குமிடையில் தொடர்புகள் இருக்க வேண்டியது அவசியம் என்று இங்கு விஜயம் செய்துள்ள மங்கோலியப் பிரதமர் யும்ஜாகின் செடென்பால், மைசூர் பிரதம மந்திரி திரு பி. டி. ஜட்டியால் தனக்களிக்கப்பட்ட அரசாங்க விருந்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: காலனி ஆட்சியால் நமது இருநாடுகளுக்குமிடையே இருந்து வந்த தொடர்பில் குறுக்கீடுகள் ஏற்பட்ட போதிலும்கூட இந்திய உப ஜனாதிபதி திரு. ராதாகிருஷ்ணன் 1947-ல் மங்கோலியாவிற்கு விஜயம் செய்த பிறகு இரு நாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்பு மீண்டும் புத்துயிர் பெற்றது என்றார். ராதாகிருஷ்ணனின் விஜயம் நட்புறவை பலப்படுத்தியது. சரித்திரகாலம் தொட்டே இரு நாடுகளுக்குமிடையே கலாச்சாரத் தொடர்பு இருந்து வருகிறதென்றும் கூறினார்.

தனது இந்திய சுற்றுப் பிரயாணத்தின்போது பழைய கலாச்சாரத்தின் சின்னங்களையும் நவீன வளர்ச்சியையும் கண்டேன் என்று மங்கோலியப் பிரதமர் கூறினார்.

மைசூர் முதலமைச்சர்

ஆரம்பத்தில் மங்கோலியப் பிரதமரை வரவேற்று மைசூர் முதலமைச்சர் பேசும்போது, மங்கோலியப் பிரதமரின் இந்திய விஜயமும் தலைவர்களோடு அவர் நிகழ்த்திய சம்பாஷணையையும், இரு நாடுகளுக்குமிடையே நிலவும் நட்புறவை வலுப்படுத்தும், உலக சமாதானத்திற்கு உதவி செய்யுமென்று கூறினார். திரு. ஜெட்டி பேசும்போது மேலும் குறிப்பிட்டதாவது:

உலகத்து நாடுகளெல்லாம் பஞ்சசீலக் கோட்பாடுகளில் தங்களது நம்பிக்கையை உறுதிப்படுத்தினால் இன்றைய உலக நெருக்கடியை தணிக்க பெரிதும் உதவும். மனித சமுகத்தை பூண்டோடு அழிக்கும் சக்திவாய்ந்த அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்துவது மட்டுமல்ல பூரணமாக அழித்துவிடும் காலம் விரைந்து வருகிறதென்றும் அக்காலம் சர்வதேச பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகுக்கு மென்றும் திரு ஜெட்டி கூறினார்.

(பி. டி. ஐ)

பீகாரில் உணவுப் போராட்டம்

பல நகரங்களில் சத்தியாக்கிரகம்

தர்பங்காவில் தடியடிப்பிரயோகம் வழக்கறிஞர் உட்பட 63 பேர் கைது

பாட்னா, செப். 14—

மேற்கு வங்க உணவுப் போராட்டத்தைத் தொடர்ந்த நேற்று முதல் பீகார் மாநிலத்திலும் உணவுப் போராட்டம் ஆரம்பமாகியது. நேற்று தர்பங்கா கலெக்டர் காரியாலயத்தின் முன்னால் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்த தொண்டர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள். அதனால் பல தொண்டர்கள் படுகாயமுற்றனர்.

தடியடிப் பிரயோகம் செய்த பின்னரும் தொண்டர்கள் கலைந்து செல்லாததைக் கண்ட போலீசார் 63 தொண்டர்களைக் கைது செய்தார்கள். அவர்களில் வழக்கறிஞர் ஒருவரும், பிரபல வியாபாரி ஒருவரும் இருக்கிறார்கள்.

பீகாரில் விலைவாசி உயர்வு, வரி உயர்வு எதிர்ப்புக் கமிட்டியே போராட்டத்தை நடத்தி வருகின்றது. ஆரம்பத்தில் இப்போராட்டத்தில் பங்கு கொள்வதாக இருந்த பி. சோ. கட்சி வழக்கம் போல் துரோகம் செய்துவிட்டு, போராட்டத்திற்கு எதிராக காங்கிரஸ், ஜனசங்கக் கட்சிகளைப் போலவே அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. இக்கமிட்டியில் அங்கம் வகித்த சில பி. சோ. ஊழியர்களும் கமிட்டியிலிருந்து ராஜினாமாச் செய்துவிட வேண்டுமென்று மாநில பி. சோ. கட்சியின் நிர்வாகக்குழு கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பாட்னாவில்

பாட்னாவில் நேற்று நானூறுக்கு மேற்பட்ட தொண்டர்கள் கோரிக்கை தட்டிகளைத் தாங்கிக் கொண்டு நகரத்தின் பிரதான வீதிகளில் ஊர்வலமாக வந்தனர். "விவசாயக் கடன் தாராளமாக வழங்க வேண்டும், போதுமான உணவு தானியம் வழங்க வேண்டும், அரசாங்கமே ஊதாரிச் செலவுகளை நிறுத்து, நிர்வாக லஞ்ச ஊழல்களை விசாரிக்க கமிஷன் நியமிக்கவேண்டும்" என்று அவர்கள் கோஷங்கள் முழக்கினார்கள்.

பின்னர் கலெக்டர் அலுவலகத்தோடு இணைந்திருக்கும் வழக்கு மன்றத்தின் முன்னால் அவர்கள் சத்தியாக்கிரகம் செய்தார்கள். வழக்கு மன்றத்திற்கு ஆயுதம் தாங்கிய போலீசார் காவல் காத்துக்கொண்டிருந்தனர். நகரத்தின் பிரதான இடங்களிலும் காலை முதல் போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

தமிழகத்தில் விரைவில் உணவுப் போராட்டம்

தோழர் பி. ராமமூர்த்தி அறிவிப்பு

திருச்சி, செப். 14—

"சென்னை அரசாங்கத்தின் உணவுக் கொள்கையை எதிர்த்து விரையில் கம்யூனிஸ்டுக் கட்சி போராட்டம் துவங்கும்" என்று கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் தோழர் பி. ராமமூர்த்தி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

(பி. டி. ஐ.)

உட்பிரியார் போராட்டத்தில் தலையிடுக

சர்க்காருக்கு தந்தி

தேவர் ஷோலா, செப். 9—

உட்பிரியார் தோட்டத் தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். உடனே சர்க்கார் தலையிட்டு அவர்களுடைய கோரிக்கைகளை வழங்கும்படி தோட்ட முதலாளியை நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்று கோரி தேவர் ஷோலா எக்ஸ்பெரிமெண்டல் ஸ்டேஷன் தொழிலாளர்கள் சென்னை சர்க்கார் தொழில் மந்திரிக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளனர்.

இந்தியாவில் படித்தோர் தொகை

புதுடில்லி செப். 14—

இந்தியாவில் 1951ம் ஆண்டில் 17 சதவிகிதத்துக்கும் குறைவாகவே படித்தவர் விகிதாச்சாரம் இருந்தது எனவும், அது இப்பொழுது 40 சதமானத்தைக் காட்டிலும் அதிகரித்துவிட்டதாகவும் 8 சதமானமிருந்த படித்த பெண்களின் சதமானம் இப்போது 29 ஆகிவிட்டதாகவும் இந்திய சர்க்கார் அறிவிக்கிறது

சந்திரனில்மனிதன் இறங்கமுடியும்

மிகவும் கஷ்டமென்றாலும் சாத்தியமே!

அடுத்த நடவடிக்கை பற்றி ரஷ்ய விஞ்ஞானி டோப்சிவிக்

மாஸ்கோ, செப். 14—

"சந்திரனில் மனிதன் இறங்குவது மிகவும் கஷ்டமான காரியம் தான்; என்றாலும் சந்திரனில் மனிதன் இறங்குவதற்கான வழிவகைகளையும் பரிகாரங்களையும் காணுவது சாதிக்க முடியாத விஷயமல்ல" என்று சோவியத் விஞ்ஞானக் கழகத்தின் தலைவர் தோழர் அலெக்ஸாண்டர் டோப்சிவிக் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

சந்திரனில் ராக்கெட் இறங்கியது பற்றிய செய்திகளை சோவியத் விஞ்ஞானிகள் அறிவிப்பதற்காக பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டைக் கூட்டியிருந்தார்கள். அந்த மகாநாட்டில் பத்திரிகையாளர்களின் கூட்டம் எக்கச்சக்கமாகக் கூடிவிட்டது என்று சோவியத் செய்தி ஸ்தாபனமான "டாஸ்" அறிவிக்கிறது. டெலிவிஷன் மூலமாகவும் வானொலி மூலமாகவும் உலகமெங்கும் இச்செய்திகளைப் பரப்புவதற்கு பத்திரிகையாளர்கள் பரபரப்பாக இருந்தார்கள்.

ஏராளமான விஷயங்கள்

2-வது லூனிக், சந்திரனில் நேற்று வெற்றிகரமாக இறங்கியதையடுத்து இன்னும் எவ்வளவோ விஷயங்கள் பதியாகியிருக்கின்றனவென்றும், கிடைத்துள்ள அந்த சமிக்ஞைகளை வெற்றிகரமாக ஆராய்ந்து வருவதாக டோப்சிவிக் தெரிவித்தார்.

"சந்திரனின்தரைப்பகுதியைத் தொடும் வரையிலும் ராக்கெட்டின் சமிக்ஞைக் கருவிகள் அனைத்தும் நல்ல முறையில் வேலை செய்து கொண்டிருந்தன.

எங்களுடைய விஞ்ஞானிகள் அந்த சமிக்ஞைகளை பற்றி முடிவுகள் செய்து ஒழுங்குப் படுத்திய பின் மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி தீர்மானிப்போம்" என்றார்.

உணவு மந்திரி காரியாலயத்தில் தீ விபத்து

புதுடில்லி, செப். 14—

மத்திய உணவு மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த அலுவலகங்கள் உள்ள கட்டிடத்தில் இன்று மாலை தீ விபத்து ஏற்பட்டது. மூன்று மணி நேரத்திற்கு மேல் விடாமல் எரிந்தது. விவசாயக் கண்காட்சிக்காக வைத்திருந்த பொருள்கள்எரிந்து சாம்பலாயின. நெருப்பணைக்கும் படையினர் விரைந்துநெருப்பை அணைத்தனர்.

கேரளத்தில் ஹரிஜனங்கள் தாக்கப்படும் அநீதி

கம்யூனிஸ்டுகளுக்கும் இன்னல்கள்

உள்நாட்டு மந்திரியிடம் கம்யூனிஸ்டு எம். பி.க்கள் மகஜர்

புதுடில்லி, செப். 14—

பார்லிமெண்டின் 13 கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் (கேரளத்தின் பிரதிநிதிகள்) இன்று உள்நாட்டு மந்திரி பண்டித பந்தைச் சந்தித்து அவரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர். கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் மீது தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக அம்மகஜரில் வற்புறுத்தப்பட்டது.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

"ஹரிஜனங்களும் பின் தங்கிய வகுப்பினருமே முக்கியமாகத் தாக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் அநேகர் பயத்தால் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பவில்லை. போலீசார் இவ்வித அராஜகச் செயல்களுக்கு உடந்தையாகவே இருக்கின்றனர். குற்றவாளிகள் மீது போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை.

முன்னாள் முதல் அமைச்சர் இ. எம். எஸ். நம்பூதிரிபாடு, தோழர் ஏ. கே. கோபாலன் உள்பட கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது கல்வீச்சு நடந்தது பற்றியும் அம்மகஜரில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல்கள் நடக்கப்போவதை முன்னிட்டு, இவ்வித அராஜகச் செயல்களைத் தடுத்துவிட வேண்டுவது அவசியமென்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

"இவ்வித பலாத்காரச் செயல்களைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்காவிட்டால், தேர்தல்கள் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடக்க முடியாது, மக்களின் வாழ்க்கை அபாயத்திற்கு ஆளாகிவிடும்." என்றும் மகஜரில் கூறப்பட்டிருக்கிறது.

பண்டித பந்த் பதிலளிக்கையில், கேரளத்தில் அமைதிக்குப் பங்கம் ஏற்படாமல் காக்க ஆவன செய்ய மத்திய சர்க்கார் அக்கறையுள்ளதாக இருக்கிறதென்றும் அந்நோக்கத்துடன் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் கூறினார்.

(பி. டி. ஐ.)

பீகார் சட்டமன்றத்தில் குழப்பம்!

பி. சோ. மெம்பர்கள் சபாநாயகரின் கட்டளையை மீறினர்

குழப்பத்தை அடக்க ராணுவ தளபதி அழைக்கப்பட்டார்

பாட்னா, செப். 14—

சபாநாயகரின் கட்டளையையும் மீறி, பி. சோ. மெம்பர் ஒருவர் தம்முடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற வேண்டுமென்று வற்புறுத்தியதால் நேற்று சட்டமன்றத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

பீகார் சட்ட மன்ற சரித்திரத்திலேயே முதன் முறையாக சபாநாயகர் இராணுவ தளபதியை அழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனினும் தளபதி வருவதற்கு முன்பே தீர்மானம் கொண்டுவந்த பி. சோ. மெம்பர் சப்தம் போட்டுக்கொண்டே சபையைவிட்டு வெளியேறிவிட்டார். அவரைத் தொடர்ந்து ஒருவர் பின் ஒருவராக ஒன்பது பி. சோ. மெம்பர்கள் வெளியேறினார்கள். ஒரு மெம்பரை பலவந்தமாகத் தூக்கிச் செல்ல நேரிட்டது. ராமநாத் திவாரி என்ற பி. சோ. மெம்பர் இக்குழப்பத்திற்கிடையே பேச முற்பட்டபோது வெளியேறிய பி. சோ. மெம்பர்கள் மீண்டும் வந்து பல கோஷங்கள் போட்டார்கள். இந்தச் சமயத்தில் சபாநாயகர் சபையைக் கலைத்துவிட்டார்.

சீந்துவார் இல்லை

தலாய் லாமா திண்டாட்டம்

புதுடில்லி, செப் 14—

"திபேத் விவகாரத்தை ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்ல இது வரை எந்த நாடும் முன்வரவில்லை" என்று நேற்று தலாய் லாமா பத்திரிகை நிருபர்களிடையில் பேசுகையில் கூறினார்.

திபேத் விவகாரத்தை ஐ. நா. சபையில் கிளப்ப வேண்டும் என்று பல நாடுகளின் இந்தியத் தூதுவர்களை அணுகுவதற்காக தலாய்லாமா இம்மாதம் முதல் தேதி முதல் டில்லியில் தங்கியிருந்தார். இப்பொழுது எவரும் அவருக்கு உதவி செய்ய முன் வராததால், திரும்பவும் முசோரிக்கு பிர்லா பங்களாவிற்கே திரும்பிச் சென்றுவிட்டார்.

எனினும் நியூயார்க்கிற்குச் செல்லும் அவரது சகோதரர் மீண்டும் முயற்சிப்பார் என்று கூறினார். டில்லி ரயில் நிலையத்தில் அவரை வழியனுப்புவதற்கு பி. சோ. தலைவர் ஆச்சாரியா கிருபளானியும் வந்திருந்தார்.

நாகபுரி பகுதியில் கனத்த மழை

நாகபுரி, செப். 14—

நாகபுரி பகுதியில் கனத்த மழை பெய்ததன் விளைவாக டெல்லி-சென்னை ரயில் போக்குவரத்தும், சுற்றுப்புற நகரங்களுக்குரிய பஸ் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளன. மோர்னா நதி பெருக்கெடுத்து அகோலா நகரில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

சிறு தொழில்களுக்கு 600 கோடி ரூபாய்

மந்திரி மனுபாய் ஷா தகவல்

பங்களூர், செப். 14—

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், நடுத்தரத் தொழில்களின் அபிவிருத்திக்காக மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 600 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்படும் என்று மத்திய கைத் தொழில் மந்திரி மனுபாய் ஷா இன்று கூறினார்.

ஆசிய மைசூர் தொழிலதிபர் மாநாட்டில் பேசிய ஷா சிறு தொழில்கள் துறையின் எதிர்காலம் பற்றிய ஒரு விரிவான சித்திரத்தை வெளியிட்டார்.

சிறு தொழில்களை வளர்க்கக் கடன் உதவி, தொழில் நுட்ப உதவி, சந்தை தேடுவதற்கான வசதிகள் இவை சர்க்காரால் தரப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தரத்தை உயர்த்துக

உற்பத்தியாளர்கள் பண்டங்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். பவுண்டன் பேனா உற்பத்தி இருபது லட்சத்திலிருந்து 2 கோடி 10 லட்சமாக அதிகரித்துள்ளது ஆனால் தரம் உயரவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

நீலகிரி ஜில்லா

தோட்டத் தொழிலாளர் தலைவர் பி. விருத்தகிரி உண்ணாவிரதம்

பழிவாங்கப்பட்டவர் பிரச்சினையை மத்தியஸ்தர் தீர்ப்புக்குவிட கோரிக்கை

நீலகிரி, செப். 14—

நீலகிரி ஜில்லா தேயிலைத் தோட்டத் தொழிலாளர் தலைவர் பி. விருத்தகிரி இன்று முதல் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார். பழிவாங்கப்பட்ட உட்பிரியார் தோட்டத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், சர்க்காரின் பாரபட்சப் போக்கைக் கண்டித்தும் கடும் தவத்தை மேற்கொண்டிருக்கிறார்.

செப்டம்பர் முதல் தேதியே ஆரம்பிக்கப்படுவதாக இருந்த இப்போராட்டமானது, சமரசம் செய்து வைப்பதாக ஜில்லா கலெக்டர் கூறியதின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது. சமரசத்துக்கு உட்பிரியார் தோட்ட முதலாளி இம்மியும் நகர மறுத்து விட்டதால், 7-9-59 முதல் பெண் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்ததை ஏற்கனவே நேயர்கள் அறிவார்கள்.

மத்தியஸ்தர் தீர்ப்புக்கு

பழிவாங்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுப்பது பற்றிய கோரிக்கையை மத்தியஸ்தர் தீர்ப்புக்குவிட வேண்டுமென்று வற்புறுத்துவதற்காகவே தொழிலாளர் தலைவர் பட்டினி விரதம் மேற்கொண்டுள்ளார்.

தொழிலாளர்கள் கிளர்ச்சி

உட்பிரியார் தோட்டம் மட்டுமின்றி, ஜில்லா முழுவதுமுள்ள பல்வேறு தோட்டங்களிலும் 'சர்க்கார் உடனே தலையிட்டு அட்ஜூடிகேஷனுக்கு விட வேண்டுமென்று தொழிலாளர்கள் பெருங் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஊரெங்கும் பெரும் பரபரப்பாயிருக்கிறது.

கார்டு மூலம் சர்க்கரை வினியோகம்

பம்பாய், செப். 14—

இரண்டு லட்சத்திற்கு மேல் ஜனத்தொகை உள்ள நகரங்களில் உணவுக் கார்டு அடிப்படையில் வீட்டுக்கு வீடு சர்க்கரை வினியோகத்தை ஒழுங்குபடுத்த பம்பாய் சர்க்கார் முடிவு செய்துள்ளது. இந்த ஏற்பாடு உடனடியாகத் தொடங்கும்.

ஜனசக்தி

சென்னை 16-9-1959

மகத்தான சோஷலிஸ சமுதாயத்தின் உலகம் வியக்கும் சாதனை!

4 பவுண்ட் எடையுள்ள
சோவியத் ராக்கெட்
ளில் விநாடிக்கு 7 மைல்
த்தில் உயர்ந்து சென்று
று (14-ந் தேதி) இரவு
வது இந்திய நேரம்
2-31 மணிக்கு சந்தி
அடைந்துவிட்டது.
ச் செய்தி உலகெங்கு
ா கோடி கோடிக்கணக்
மக்களிடையே எல்லை
ர உற்சாகத்தை, மட்
ர மகிழ்ச்சியைத் தந்துள்

ாஷலிஸ சமுதாயத்தின்
ச் சாதனை உலகப் பாட்
வர்க்கத்திற்கு பெரு
நரும் மகத்தான சாதனை
ம். உலகப் பாட்டாளி
கப் போராட்ட சின்ன
சுத்தியும் அரிவாளும்
ித்த அந்த ராக்கெட்
னிக்" சந்திரலோகத்தை
ர முதலாக அடி எடுத்து
தப் பெருமை பெற்று
து.

. க்கத் தெரியாதவன்,
து 'வாசனை அறமவன்,
ர கையல் அரசாட்சி
ருல், முதலில் நிலத்து
து; ஏனெனில் ஆட்சி
கலை அவனுக்குத்
ாது; அப்படிய ஆட்சி
நீடித்து இருந்த போதி
அவனால் ஒன்றும்
முடியாது, ஒரு முன்
றமும் காண முடியாது
உலக முதலாளித்துவ
ம் சென்ற 40 ஆண்டு
ப் பிரச்சாரம் செய்த
ல்லவா?

) ஆண்டுகளாக உல
ஆட்டிப் படைத்துவந்த
ாளித்துவ சமுதாய
செய்ததும் படுதோல்வி
து முதலாளித்துவ
ா அமெரிக்கா அனுப்
ராக்கெட்டுகள் சிறிது
திமகுமேல செல்ல
யாமல தத்தளித்துக்
ாடிருக்கையில், அவ்
சென்றாலும் திட்டமிட்ட
சல்லாமல காட்டுக்குப்
டுக்கும் செல்வதுபோல
லும் நிலைமையிலிருக்கு
, 42 ஆண்டுகளுக்
ாகவ அதிகாரத்தைத்
கையில் எடுத்துக்
ட பாட்டாளி வர்க்கத்
சோவியத் நாடு சந்திர
த்திற்கு தன்னுடைய
தூதுவனை அனுப்பும்
ல மகத்தான வெற்றி
விட்டது என்றால்
சாதாரணமான தொரு
ரயா?

ந் ஞானத்துறையிலும்,
சாஸ்திர ஞானத்தி
பொருளாதார முன்
சியிலும் மிகப் பெரிய
னற்றம் கண்டிருந்தா
அமெரிக்காவையும்
ம் வண்ணம் இந்த
சாதனை கண்டிருக்க
ா? திட்டமிட்டு முன்
் சோஷலிஸ பொரு
ர சமுதாயத்தின் அதி
ச் சாதனை இது. மனித
மனிதன் அடிமை
என்று பிரகடனம்
சமுதாயத்தின சாதனை
ஏழை என்றும் அடிமை
எவனுமில்லை ஜாதி
ன்று நீது வகுத்த சமு
ின் சாதனை இது.
மக்கள் சொன்னபடி
ாழ்வு, மேன்மையுறக்
நீதி' வகுத்த சமுதா
சாதனை இது.

அளப்போம் கடல்
யளப்போம்
மண்டலத்தியல்
டு தெளிவோம்"
பாரதியின் கனவு
லிஸ நாட்டில் இன்று
இருப்பதைக் கண்டு
மக்களாகிய நாம்
ந்தம் கொள்கிறோம்.
ம் அளந்து, சந்திர
த்திற்கே சென்று,
ள நிலைமையை
து இவ்வுலகிற்கு விவ
கூறும் சாதனைகளை
ாதித்த சோவியத்நாட்
னமாரப் போற்று
வாழ்த்துகிறோம்.
டாவது லூனிக்கைச்
க்கு அனுப்பிய விஞ்
... சந்திர

னின் மண்ணைக் கொண்டு வந்து பரிசோதனை செய்யும் வேலை ஈடுபடுவோம் என அறிவிக்கின்றனர். அதன் பிறகு மனிதன் செல்லும் முதல் ஆகாயக் கப்பல் சந்திரனில் சீக்கிரமே இறங்கும் எனவும் அறிவிக்கின்றனர்.

இந்த வார்த்தைகள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் சிறுவர்களுக்குக் கூறிவந்த கதைகளில் காணப்படும் சொற்களாக இருந்தன. இன்று அவைகளை சாதாரணமாக மக்கள் நம்பக்கூடியவார்த்தைகளாக்கிய பெருமையை சோவியத் சோஷலிஸ நாடு பெற்று விட்டது.

ராணுவ பலத்தின் மூலம், தங்களது உயர்ந்த யுத்தக் கருவிகள் மூலம் உலகை அடிமைப்படுத்தி வந்தவர்களுக்கு அல்லது இன்று மீண்டும் அடிமைப்படுத்துவோம் என மிரட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு சோஷலிஸ நாட்டின் இச்சாதனை வேம்பாய்க் கசக்கும். பிற நாடுகளை அடிமைப்படுத்தச் சதிசெய்து கொண்டிருப்பவர்களுக்கு சோஷலிஸ நாட்டின் பெருகிவரும் இந்த வல்லமை, திட்டமிட்டபடி ஒரு ராக்கெட்டை லட்சக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள குறிப்பிட்ட தொரு இடத்திற்கு அனுப்பிவைக்கும் சோவியத் நாட்டின் இச்சக்தி அவர்கள் அடிவயிற்றில் வேல் கொண்டு பாய்ச்சியது போன்றதாகும். உலக சமாதானத்தை உறுதியுடன் பாதுகாப்பதற்காகவும், ஒவ்வொரு நாட்டின் சுதந்திரத்தின் உண்மையான பாதுகாவலனாகவும் இருந்துவரும் சோவியத் யூனியன் கையில் இந்தப் பிரம்மாண்டமான விஞ்ஞானப் பொருளாதார சக்தி இருப்பதைக் கண்டு நல்வாழ்வு வாழ விரும்பும் கோடிக்கணக்கான மக்கள் பேரானந்தம் கொள்வார்கள்.

பலத்தின் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற கொள்கையை வைத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியவாதிகளை இச் செய்தி ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் என்று நம்புவோமாக! சோவியத் பிரதமர் குருஷ்சேவின் அமெரிக்க விஜயமும், இரண்டாவது லூனிக் சந்திரலோகத்திற்கு விஜயம் செய்திருப்பதும் நம் உலகில் நிரந்தர சமாதானம் நிலவ எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கைகளாக இருக்குமென்று எதிர்பார்ப்போமாக!

நேருவுக்கு சூ என்-லாய் எழுதிய கடிதம்

[1]

இந்திய பிரதமர் நேருவுக்கு செப். 8-ந் தேதி சீனப் பிரதமர் சூ-என்-லாய் எழுதிய கடிதத்தின் முழு வாசகத்தையும் கீழே தருகிறோம். சீன-இந்திய எல்லைப் பிரச்சினையின் வரலாறு பற்றிய பல விபரங்களை இக்கடிதம் தருகிறது.

அன்புள்ள பிரதம மந்திரி அவர்களே!

1959-ம் ஆண்டு மார்ச் 22-ம் தேதிய தங்கள் கடிதத்தை கவனத்தோடு படித்தேன். இந்திய-சீன எல்லை விஷயமாக நமது இரு அரசாங்கங்களுக்கும் அடிப்படை வேறுபாடு இருப்பதை தங்கள் கடிதத்தின் மூலம் கண்டேன். இது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதோடு, தங்கள் கடிதத்திற்கு எவ்வாறு பதிலளிப்பது என்று ஆலோசிப்பதற்கு நீண்ட காலமும் தேவைப்பட்டுவிட்டது.

சிக்கலான விஷயம்

சீன-இந்திய எல்லை விஷயம் சரித்திர ரீதியாகவே சிக்கலான விஷயமாகும். இந்தியா பிரிட்டனின் ஆட்சியிலிருந்தபொழுது, சீனத்தின்மீது பிரிட்டன் செய்த ஆக்கிரமிப்பு சரித்திரச் சூழ்நிலையை கணக்கிலெடுத்துக் கொள்ளாது இப்பிரச்னையைத் தீர்க்க முடியாது. சீனத்தின் திபேத் பகுதியை ஆக்கிரமிக்க வேண்டுமென்ற எண்ணம் பிரிட்டனுக்கு வெகுகாலத்திற்கு முன்பிருந்தே இருந்துவந்தது. சீனத்திலிருந்து திபேத் தனியாகத் துண்டிக்கப்படவேண்டும் என்பதற்காக தொடர்ந்து திபேத்தைத் தூண்டிக்கொண்டேயிருந்தது. பெயரளவில் திபேத்தை சுதந்திர நாடாக்கி தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள முயற்சி செய்தது. இம்முயற்சியில் தோல்வியடையவே, பெயரளவில் திபேத்தின் மீது சீனத்தின் மேலாதிக்கத்தை அனுமதித்து, திபேத்தை தமது செலவாக்கின் கீழ் வைத்துக் கொள்ள விரும்பி, சீனத்தின்மீது எல்லாவிதமான நிர்ப்பந்தங்களையும் கொண்டு வந்தது.

அதே சமயத்தில், இந்தியாவைத் தமது தளமாகக்கொண்டு திபேத்தின் எல்லைப் பகுதியில் மட்டுமல்லாது, சிங்கியாங் பகுதியிலும் பிரிட்டன் தமது எல்லையை விஸ்தரித்தது. சீன-இந்திய எல்லையில் உடன்பாடு ஏற்படாததற்கும், நீண்டகாலத் தகராறிற்கும் இவைகள்தான் அடிப்படைக் காரணங்களாகும்.

இந்தியாவும் சீனாவும் நீண்ட காலமாகவே ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த நாடுகளாகும். அதனால் ஏற்பட்டிருக்கும் பொது அனுபவத்தில் இந்தியாவும் சீனாவும் மேற்கூறிய சரித்திரச் சூழ்நிலையைப்பற்றி ஒரேவிதமான கருத்து கொண்டிருக்க வேண்டுவது இயற்கையே. ஒருவருக்கொருவர் அனுதாபம் காட்டும் முறையிலும், ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும் முறையிலும், எல்லை விஷயமாக நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்து கொள்வதும் இயற்கையே.

இந்திய அரசாங்கம் அப்படிப்பட்ட முறையிலேயே நடந்து கொள்ளும் என்று சீன அரசாங்கம் ஆரம்பத்தில் எண்ணியது. ஆனால் எதிர்பாராதவிதமாக, பிரிட்டன் சீனத்தின் திபேத் பகுதியை ஆக்ரமிப்பதற்குக் கையாண்ட கொள்கையினடிப்படையிலேயே சீன-இந்திய எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கோரியது. தம்முடைய கோரிக்கைக்கு ஆதரவாக பலாத்காரத்தைப் பயன்படுத்துவதற்குக் கூடத் தயங்காமல் இந்தியா எல்லா வகையான நிர்ப்பந்தத்தையும் சீன அரசாங்கத்தின் மீது கொண்டு வந்தது. அதனால் சீன அரசாங்கம் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்காமல் இருக்க முடியாது.

சரித்திரப் பின்னணியையும், யதார்த்த உண்மைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, பஞ்சசீலக் கோட்பாடுகளின் அடிப்படையில், நன்கு திட்டமிடப்பட்ட முறையில் படிப்படியாக, சமாதான பூர்வமான பேச்சு வார்த்தையின் மூலம் எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று தொடர்ந்து சீன அரசாங்கம் வற்புறுத்திக் கொண்டு வந்தது.

இதற்கிடையில், இடைக்கால ஏற்பாடாக இரண்டு நாடுகளும் ஏற்கனவேயுள்ள எல்லை வரையறையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வெல்லையை தனிப்பட்ட முறையில் ஒரு நாடும் மாற்றக் கூடாது. பலாத்காரமே பயன்படுத்தப்படக் கூடாது. எல்லைப் பகுதியில் அமைதியை நிலை நாட்டுவதற்காகவும், இரு நாடுகளின் நட்புறவு பாதுகாக்கப்படுவதற்காகவும் தனிப்பட்ட திட்டுப் பிரதேசங்கள் சம்பந்தமாக பேச்சுவார்த்தையின் மூலம் இடைக்கால ஒப்பந்தத்திற்குவர முடியும். இந்த அடிப்படையான எண்ணத்தை 1959-ம் ஆண்டு ஜனவரி 23-ம் தேதி உங்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறேன். எல்லை விஷயத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்த வழியைத்தான் பின்பற்ற வேண்டும் என்று சீன அரசாங்கம் இன்னும் கருதுகிறது. 1959-ம் ஆண்டு மார்ச் 22-ம் தேதிய தங்கள் கடிதத்திலிருந்து இக்கொள்கைக்கு தாங்கள் மாறாக இல்லை என்பதுதான் தெரிகிறது.

எல்லையில் உள்ள நிலைமை

தங்கள் கடிதத்தில் எழுதப்பட்டுள்ள கேள்விகள் சம்பந்தமாகவும், சீன-இந்திய எல்லையில் அண்மையில் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றியும் சீன சர்க்காரின் நிலவரம் என்ன என்பதை மேலும் விளக்கமாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

1. ஜனவரி 23-ந் தேதி நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் சீன-இந்திய எல்லை எப்போதுமே சம்பிரதாயமாக நிர்ணயித்து வகுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தேன். 1959 மார்ச் 22-ந் தேதி தாங்கள் எழுதிய கடிதத்தில் இதற்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்திருந்தீர்கள். அதோடு சீன-இந்திய எல்லையில் பெரும்பகுதி சம்பந்தமாக முன்னுள்ள இந்திய சர்க்காருக்கும், சீனாவின் மத்திய சர்க்காருக்கும் இடையே குறிப்பிட்ட சாசனபூர்வ உடன்பாடு இருந்திருக்கிறது என்று நிரூபிக்க உற்சாகத்துடன் முயன்றிருக்கிறீர்கள். சீன-இந்திய எல்லை சம்பிரதாயமாக எப்போதுமே நிர்ணயிக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கப் பின்வரும் உண்மைகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்:

(1) சீனாவைச் சேர்ந்த சிங்கியாங்கையும் லடாக்கிலிருந்து திபேத் பிரதேசங்களையும் பிரித்துக் காட்டும் எல்லை பற்றி.

1842-ல் சீனாவின் திபேத் அதிகாரிகளுக்கும் காஷ்மீர் அதிகாரிகளுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது வாஸ்தவம். இருந்தாலும் இந்த உடன்பாடு ஏற்பட்ட காலத்தில் சீனத்து மத்திய சர்க்கார் அதில் கலந்துகொள்ள யாரையும் அனுப்பிவைக்கவில்லை. இந்த உடன்பாட்டைப் பிறகு ஊர்ஜிதம் செய்யவுமில்லை. மேலும் இந்த உடன்பாடு லடாக்கும் திபேத்தும் தத்தம் எல்லை வழிநிற்கும் என்று பொதுவாகக் குறிப்பிட்டதே தவிர, எல்லையில் இருக்கும் இந்தப் பகுதிபற்றிக் குறிப்பான விதிகளோ, விளக்கமோ எதுவும் கொடுக்கவில்லை.

இந்த உடன்பாட்டை வைத்துக்கொண்டு இருபுறத்திலும் எல்லைகள் வகுக்கப்பட்டதாக நிரூபிக்க முடியாது என்பது தெளிவு. அதோடு இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு எல்லையின் இந்தப்பகுதியைபற்றி இந்திய சர்க்கார் தாம் மட்டுமே உரிமை கொண்டாடி சீனா இதை ஏற்க வேண்டும் என்று கேட்க இடமே இல்லை.

1847-ல் பிரிட்டிஷ் பிரதிநிதியிடம் சீன அதிகாரி வெளியிட்ட அறிக்கை — இந்திய பகுதி பற்றி சீன சர்க்காருக்குத் தெளிவான கருத்து இருந்திருக்கலாம். இதை இருபுறமும் உள்ள எல்லைகளை நிர்ணயித்துவிட்டதற்குரிய அத்தாட்சியாகக் கொள்ள முடியாது.

எல்லை நிர்ணயிக்கப் படவில்லை

வாஸ்தவத்தில் 1899-ம் வருடம் வரையில் பிரிட்டிஷ் அரசாங்கம் சீன சர்க்காரிடம் இந்த எல்லைப் பற்றி நிர்ணயம்செய்ய யோசனை கூறியது. ஆனால் சீன அரசாங்கம் ஒப்புக்கொள்ளவில்லை. நீங்களும் ஆக. 28-ந் தேதி மக்கள் சபையில் பின்வருமாறு கூறினீர்கள்.

"இது பழைய காஷ்மீர் ராஜ்யம் திபேத்துடனும், சீனத்துருக்கிஸ்தானத்துடனும்" கொண்டிருந்த எல்லை; இந்த எல்லைப்பகுதி எப்பொழுதுமே நிர்ணயிக்கப்படவில்லை என்று காண முடியும்.

சீனாவுக்கும் லடாக்குக்கும் இடையே சரித்திர பாரம்பரியங்களின் அடிப்படையில் உருவான சம்பிரதாய எல்லைக்கோடு இருக்கிறது. இதை ஒட்டியே சீன தேசப்படங்களில் இந்தக் கோடு குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லையின் இந்தப் பகுதி பஞ்சாப் மேற்கு இமாலயம் அருகிலுள்ள பகுதிகள் தேசப்படத்தில்— கிழக்கு இந்தியக் கம்பெனி டைரக்டர்கள் உத்தரவுப்படி ஜான்வாக்கர் என்ற பிரிட்டிஷ்காரர் தீட்டிய தேசப்படம் இது. (மேஜர் அலக்ஸாண்டர் கன்னிங்ஹாமின் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது) இதுவும் கிட்டத்தட்ட சீன தேசப்படங்களுக்கு ஒத்ததாகவே இருக்கிறது.

பின்னால் வெளியிடப்பட்ட பிரிட்டிஷ், இந்திய தேசப்படங்கள் சீனப் பிரதேசங்கள் பலவற்றை லடாக்குக்குள் உட்படுத்தியிருந்தன. இவ்வாறு செய்யச் சட்டபூர்வமான காரணங்கள் எதுவும் இல்லை. இந்தக் காலகட்டம் பூராவும் இரு பக்கங்களிலும் இருந்த ஆட்சி நிர்வாகங்களின் நிலைமைக்கும் இது உடன்பாடானதல்ல.

2. சீனாவின் திபெத்திலுள்ள அப்பிரதேசத்திற்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள எல்லைப் பகுதி பற்றி.

இந்தப் பகுதியிலுள்ள எல்லையும் இரு நாடுகளுக்கிடையில் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்கள் கடிதத்திலிருந்தே தெரிகிறது. இதுமட்டுமல்ல, இந்தப் பகுதியிலுள்ள பல இடங்களைப் பற்றி இரு சார்பினருக்குமிடையில் சரித்திர பூர்வமான தகராறுகள் இருந்திருக்கின்றன என்பதும் உண்மை. உதாரணமாக திபெத்திலுள்ள ஸ்பராங்ஸால் என்னுமிடத்திற்குத் தென் மேற்கிலிருக்கும் சால், ஸாங்ஷா என்னும் பகுதிகள் எப்போதும் சீனாவையே சார்ந்தவை. முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் இப்பகுதிகளை பிரிட்டன் படையெடுத்துப் பிடித்துக் கொண்டது.

சீனாவின் திபெத்திலுள்ள பிரதேச அதிகாரிகள் இந்த பிரச்சினையை பலமுறை பிரிட்டிஷ் சர்க்காரிடம் எழுப்பிப் பார்த்தனர். பயன் எதுவும் கிடைக்கவில்லை. சரித்திரத்தில் தீர்க்காது விடப்பட்ட ஒரு பிரச்சினையாக இது இருக்கிறது.

(தொடரும்)

தேவாரப்பண்கள் ஆராய்ச்சிக்கு ஆக்கம் தருக

சட்டசபை உறுப்பினர் கோரிக்கை

இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா விவாத விபரம்

சென்னை, செப். 13—

இந்து அறநிலையப் பாதுகாப்புமசோதாவின் ஷரத்துவாரியான விவாதம் செப். 9-ல் தொடர்ந்து நடைபெற்றது.

மசோதாவின் 66-வது ஷரத்துக்குச் சுமார் 20 திருத்தங்கள் கொடுக்கப்படிருந்தன. ஆனால் விவாதத்துக்குப் பின் ஒன்றிரண்டுத் திருத்தங்கள்கூட ஏற்கப்படவில்லை பலதிருத்தங்கள் வற்புறுத்தப் படவில்லை. சில ஓட்டுக்கு விடப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டன.

விவாதங்களில் கலந்துகொண்டு பேசுகையில் தோழர் என். கே. பழனிச்சாமி, எல்லா கோவில்களையும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை என்றார். ஆண்டில் பெரும்பாலான நேரத்தில் ஊர்க்குருவிகளும் வௌவால்களும் கூடு கட்டும் நிலையில்தான் கோவில் மண்டபங்கள் இருக்கின்றன என்றார்.

திரு. க. அன்பழகன் (தி. மு. க.) பேசுகையில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றார். மனித வாழ்க்கைக்கு வழி செய்ய வேண்டியதுதான் சிறந்த இறைப்பணியாகும்என அவர்குறிப்பிட்டார்.

அர்ச்சகராக இருக்க வேண்டியவர்கள்......

கோவில் நிதிகளைப் பிற காரியங்களுக்கு உபயோகப் படுத்தக் கூடாது எனவும் குறிப்பிட்ட கர்மத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதிகள் அதற்காகவே செலவிடப்படவேண்டுமெனவும் ஏழைப் பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் தருவதும் கல்விக் கூடங்கள் அமைப்பதும் தனியாகச் செய்யவேண்டுமெனவும் அந்தக் காரியங்களுக்குக் கோவில் நிதிகளை உபயோகிப்பது தவறெனவும் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். இந்து அறநிலையங்களில் செய்யப்படும் அறங்கள் அனைத்தும் இந்துக்களுக்கே செல்ல வேண்டுமெனவும் சிலர் குறிப்பிட்டனர்.

இத்தகைய பேச்சுக்களைப் பற்றித் திரு. அன்பழகன் குறிப்பிடுகையில் அர்ச்சகர்களாக இருக்கவேண்டிய சிலர் வக்கீல்களாக மாறி அரசியலுக்கும் வந்துவிட்டனர் எனக் கூறினார்.

திரு. அன்பழகன் இவ்வாறு கூறியது வக்கீல் சமுதாயத்தைப் பழிப்பதாகும் என ஒரு பெண் அங்கத்தினர் குறிப்பிட்டதை யொட்டி சபையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

திரு. வி. கே. கிருஷ்ணமூர்த்தி (காங்) பேசுகையில் சமயத்தின் சிறப்புகள் பற்றியும் சமயாச்சாரியார்கள் அருளிய கருத்துக்களின் பெருமை பற்றியும் குறிப்பிட்டார். தமிழ்நாட்டின் அரிய யாழ் வகைகளைப் புதுப்பிப்பதும் அவைபற்றிய ஆராய்ச்சிகளைத் துரிதப்படுத்துவதும் தமிழிசை வளர்ச்சி பண்கள் ஆராய்ச்சி முதலியவற்றுக்கு ஆக்கமளிப்பதும் அரசாங்கத்தின் கடமை என அவர் வற்புறுத்தினர்.

திரு. பி. ஜி. மாணிக்கம் (காங்) பேசுகையில் இந்து மதம் தாழ்த்தப்பட்ட மக்களை அரவணைக்கத் தவறியதால்தான் அவர்கள் பிற மதங்களைத் தழுவினர் எனவும் எனவே மதமாற்றம் நடைபெறுவதாக வீணாய் பேசுவதில் பயனில்லை எனவும் கூறினார்.

திரு. பி. எஸ். சின்ன துரை (பி. சோ.) பேசுகையில், அறநிலையங்களின் சார்பா... நடத்தப்பெறும் மருத்துவ விடுதிகளின் சிகிச்சை பெறுவோர் இந்துக்களாகவே இருக்க வேண்டுமென விதித்தல் கூடாது என்றார்.

அமைச்சர் பதில்

அமைச்சர் எம். பக்தவத்சலம் விவாதத்துக்குப் பதிலளித்தார். அடியார்களுக்கும் பசித்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் உணவளிப்பதும் சிகிச்சையளிப்பதும் அந்தக் காரியங்களுக்குக் கோவில் நிதிகளைப் பயன்படுத்துவதும் இந்து மத நெறிக்குப் புறம்பானதல்ல என வலியுறுத்தினர்.

கோவிலோடு இணைந்த பகுதிகள் சிறந்த நிலையில் இருந்தால்தான் கோவிலின் சிறப்புகள் நிற்கும் என்று அமைச்சர் கூறினர். அர்ச்சனையிலும் மொழி சர்ச்சை வேண்டாம் என அவர் கூறினர். மதமாற்றம்பற்றி வீணுரைகள் கூறப்படுவதை அமைச்சர் கண்டித்தார். பிற மதத்தினரின் கல்வி நிலையங்களிலும் மருத்துவ விடுதிகளிலும் எல்லா மதத்தினருக்கும் சமமான கவனிப்பு உண்டு என்பதை விளக்கினர்.

கோவில் நிர்மாண அமைப்பு முறைகளில் ஹிந்து முறைதான் வேண்டும் எனக் கூறப்படுவதை அவர் ஏற்கவில்லை. ஹிந்து முறை நிர்மாணக் கலை என ஒரு முறை இல்லை என்பதையும் சோழர் காலமுறை, பல்லவர் காலமுறை என்றுதான் கட்டிடக் கலை பிரிக்கப்படுகின்றன என்பதையும் அமைச்சர் தெளிவுபடுத்தினர். யாழ் போன்ற நுண்ணிய இசைக் கருவிகள் ஆராய்ச்சிக்கு அதிக ஊக்கமளிக்கப்ப... கிறதெனவும் யாத்ரிகர் ... ளுக்கும் வகை செய்ய... பட்டு வருகிறதெனவும் ... அமைச்சர் கூறினர்.

சேலம் ஜில்லா தொழி... சங்கக் கவுன்சில் கூட்டம்

சேலம், செப். 7—

சேலம் ஜில்லா தொழிற்சங்கக் கவுன்சில் கூட்டம் தோழர் ஜி. சாமுவேல் தலைமையில் 4-9-59-ல் நடைபெற்றது. தோழர் பி. ராமமூர்த்தி தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியில் அணி திரள வேண்டியதின் அவசியத்தையும், அரசாங்கத்தின் பாரபட்சக் கொள்கைகளையும் குறித்துப் பேசினர்.

அகில இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ் தான் தொழிலாளர்களின்வர்க்க ஸ்தாபனமென்றும், அதன் கட்டுப்பாட்டிற்கு தொழிலாளர்கள் அனைவரும் தங்களால் இயன்றதைக் கொடுக்க வேண்டுமென்றும் பேசினர். (க. நி.)

ஆசிரியருக்குக் கடிதங்கள்

முடிதிருத்தும் கடைகளும் வார விடுமுறையும்

ஐயா,

"கனம் தொழில் மந்திரியார் கவனத்திற்கு" என்ற தலைப்பில் வெளியான கடிதத்தைப் பார்த்தேன். நண்பர் எழுதியதைப் போல் முடி திருத்தும் கடைகளில் 3 தொழிலாளர்கள் என்ற கட்டுப்பாடின்றி, அதிகமான ஆட்களை வைத்து, சிப்டு முறையில் வார விடுமுறை அளித்து, தொழில் செய்வதுதான் நல்லது. இதனால் வேலை ஆட்களோ, கடைக்காரர்களோ பாதிக்கப்படுவதில்லை. ஆதலால் மூன்று பேர்கள் என்ற கட்டுப்பாடின்றி, அதிகமான ஆட்களை வைத்து, தொழில் செய்ய அனுமதிக்குமாறு தொழில் அமைச்சரையும், லேபர் கமிஷனரையும் கேட்டுக் கொள்கிறேன்.

ப. இராமநாதன்,
மதுரை.

ஏன் இந்த பாரபட்சம்?

ஐயா,

தாரமங்கலத்தில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் ஒலி பெருக்கி வைப்பதற்கு மட்டும் எலக்ட்ரிக் சூப்பர்வைசர் அனுமதி கொடுத்து வந்தார்கள். 19-8-59-ல் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்கு மின்சார விளக்குப் போடுவதற்கும் அனுமதியளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. மாற்றுக் கட்சிகளுக்கு மறுக்கப்படும் சலுகை காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் அனுமதிக்கப்படுவது ஏன்? இதனை அரசாங்கம் கவனிக்குமா?

டி. பி. ஆறுமுகம்,
ஊராட்சி மன்ற உறுப்பினர்,
தாரமங்கலம்.

நியாய விலைக் கடை இல்லை

ஐயா,

இராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கைத் தாலுகா பெரிய கண்ணனூர் பகுதி மக்கள் உணவு தானியம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த மோசமான நிலைமையிலும் மலிவு தானியக் கடை ஏற்படுத்தவில்லை. 4500 மக்கட் தொகையைக் கொண்ட பெரிய கிராமம். இங்கு நிவாரணக் கடை ஏற்படுத்திக் கொடுக்கும்படி 3-8-59-ல் 500 விவசாயிகள் பாதயாத்திரையாக 12 மைல் சென்று தாசில்தாரிடம் மகஜர் கொடுத்தனர். அதன் பின்னர் 29-8-59 சிவகங்கை வந்திருந்த மாவட்டக் கலெக்டரை கண்ணனூர் பஞ்சாயத்துத் தலைவர் சந்தித்துக் கேட்டுக்கொண்டார். பலனில்லை. மீண்டும் 2-9-59-ந் தேதி மதுரைக்குச் சென்று கலெக்டரைக் கேட்டுக்கொண்டார். இன்று வரை மலிவு தானியக் கடை திறக்கப்படவில்லை. இவ்வூர் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்குள்ள ஊர் என்பதற்காக பாரபட்சம் காட்டுவதாக மக்கள் எண்ணுகிறார்கள். அரசியல் நோக்கத்தோடு அவ்வட்டார மக்களின் கோரிக்கையைப் புறக்கணிக்காமல் அவர்களும் இந்நாட்டு மக்கள் என்ற முறையில் அவர்களின் உணவு தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

எஸ். ஆர். கிருஷ்ணன்,
பெரிய கண்ணனூர்.

விவசாய சங்கத்தின் சேவை

ஐயா,

மேட்டூர் வடகரைக் கால்வாயில் ஆவம்பாளையத்திற்கு அருகில் 6-9-59-ம் தேதி உடைப்பு ஏற்பட்டது. விவசாய சங்க ஊழியர்கள் முன்னின்று விவசாயிகளைத் திரட்டி ஒரே நாளில் கரை அமைத்து விட்டார்கள்.

வ. கே. கந்தசாமி,
[illegible],

எட்டுமுனை

கே.எம்

தஞ்சம் புகுந்தவரின் நயவஞ்சகம்!

பிரதமர் நேரு பார்லிமெண்டில் பேசுகையில் தலாய்லாமாவின் போக்குகளைப் பற்றிக் கீழ்வரும் விதம் குறிப்பிட்டார்.

"நாம் தலாய்லாமாவை வெகுவாக மதிக்கிறோம். அதே சமயத்தில் இந்தியாவுடன் நேசமாக இருக்கும் ஒரு நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளிலிறங்கக் கூடாது என்று அவருக்குப் பல தடவை தெரிவித்திருக்கிறோம்... ஆனால் அவர் சில சமயங்களில் இந்த வரம்பிற்கு அப்பால் சென்றுள்ளார். அவருடைய அறிக்கைகள் சிலவற்றை மறுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நாங்கள் சர்ச்சைகளுக்குள் இறங்க விரும்பவில்லை. ஆனால் அவரது அறிக்கைகள் வெகுதூரம் செல்கின்றன. எனவே மறுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது." என்று பிரதமர் நேரு செப்டம்பர் 12-ல் லோக சபையில் பேசி இருக்கிறார்.

பிரதமர் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் தலாய்லாமா பிரிட்டிஷ் ஹை கமிஷனருடன் அந்தரங்க ஆலோசனை செய்து கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது.

புதுடெல்லியில் தலாய்லாமா தங்கி இருந்த இடம் ஹைதராபாத் ஹவுஸ். இது இந்திய அரசாங்கத்திற்குச் சொந்தம். இவர் டெல்லி ரயில் நிலையத்தில் வந்து இறங்கியபோது இவரை வரவேற்க அன்னிய விவகார உதவி அமைச்சர் திருமதி லட்சுமி மேனன், அரசாங்கக் காரியதரிசிகளுடன் சென்றார்.

டெல்லியில் இந்திய அரசாங்கத்தின் செலவில் தலாய்லாமா தங்கி இருந்துகொண்டு செய்த வேலையென்ன?

இந்திய அரசியலில் தலாய்லாமா கலந்து கொள்ளக் கூடாது: தலாய்லாமாவை ஒரு சுதந்திர அரசாங்கத்தின் தலைவராக நாங்கள் அங்கீகரிக்கவில்லை என்று பிரதமர் நேரு பேசினாரல்லவா? ஆனால் நடப்பதென்ன?

பி. சோ. தலைவர் கிருபளானி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது: அதற்கு தலாய்லாமா அழைக்கப்பட்டார்.

இக் கூட்டத்திற்கு தலாய்லாமா வந்ததுமட்டுமல்ல அவர் அங்கு பேசினார். பேசியது என்ன? திபெத் ஒரு சுதந்திர நாடு என அங்கீகரிப்பதும், இந்திய-சீன எல்லையாக மக்மஹோன் கோடாக இருப்பதும் ஒன்றுக்கொன்று இணைந்து பிரிக்கமுடியாத விஷயம் என்றார்.

பிரதமர் நேரு இக்கருத்தை அங்கீகரிக்கவில்லை என்றாலும், இந்திய நாட்டின் அரசியலிலும் இந்திய சீன உறவு சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் பகிரங்கமாக ஒரு அகதி தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ள இங்கு அனுமதிக்கப்பட்டிருப்பதைத் தானே இது காட்டுகிறது?

உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்யும் இந்த மித்திர பேதச் செயலை, அன்னமிட்ட வீட்டிலேயே கன்னக்கோல் வைக்கும் இந்தப் போக்கை அனுமதிப்பது ஏன்?

இந்திய அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது, மித்திரபேதச் செயல்களில் ஈடுபடக் கூடாது என்று கூறியிருந்தும் தலாய்லாமா மேற்கூறிய காரியங்களில் ஈடுபட்டிருக்கக் காரணமென்ன? இத்தகைய பேச்சுகளைப் பேசிய பிறகு நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களை தலாய்லாமா சந்தித்தார். பிரதமர் நேரு அவர்களையும் சந்தித்தார். இதன் பிறகும் அவர் செய்வதென்ன?

சீனாவின் ஒரு பகுதியாகவே திபத்தை இந்தியா கருதுகிறது என்று பிரதமர் வற்புறுத்தி வருகிறார். அவ்விதமாயின் திபெத் ஒரு சுதந்திர நாடு என்ற அடிப்படையில் சீனாவிற்கு எதிராக ஐ. நா. சபையில் திபெத் பிரச்சினையை எழுப்ப தலாய்லாமா ஏற்பாடு செய்துள்ளார். இந்திய மண்ணிலிருந்து கொண்டு இத்தகைய சீன எதிர்ப்பு வேலைகளைச் செய்து வருகிறார்; மத்திய அரசாங்க மாளிகையில் இருந்து கொண்டு இதைச் செய்கிறார். முஸ்ஸோரி மலை வாசஸ்தலத்திலிருப்பதும் இந்திய சர்க்கார் செலவில் தான்.

இவ்வாறு இந்திய மண்ணில், இந்திய அரசாங்கச் செலவில் தங்கி இருக்க அனுமதி தந்திருப்பதும், அவர் எத்தகைய அரசியலில் ஈடுபட்டாலும் இந்திய அரசாங்கத் தலைவர்களின் வரவேற்பும் உபசாரமும் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருப்பதால்தானே அவருக்கு இவ்வளவு தெம்பு ஏற்பட்டிருக்கிறது? இதை மறுக்க முடியுமா?

இது மட்டுமல்ல. ஆகஸ்டு 29-ந் தேதிய பிளிட்ஸ் ஏட்டில் தலாய்லாமாவின் கூட்டம் இந்தியாவில் செய்து வரும் சதிவேலைகள் அம்பலமாக்கப்பட்டுள்ளன.

பார்மோஸா தீவில் ஒளிந்து கொண்டிருக்கும் சியாங்கேஷேக் அனுப்பிய ஒரு மறைமுகக் கடிதம்— திபெத்... கலகம் செய்யத் தூண்டும் கடிதம்— கல்கத்தாவிலும் டார்ஜிலிங்கிலும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. கா...ம்பாங்கில் உள்ள திபெத்திய ... மொழி அச்சகம் ஒன்றில் ... அது அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. இத்...கைய சீன எதிர்ப்பு வேலைகளை நமது நாட்டில் நாம் அனுமதிப்பது முறையா? நேர்மையா? ஒழுங்கா?

தஞ்சம் புகுந்தவர்கள் நமது கொள்கைகளுக்கும் உறவுகளுக்கும் எதிராக வஞ்சகம் புரியும் வன் செயல்களை அனுமதிப்பது ஒழுங்கா என்பதைப் பற்றி நாம் சீக்கிரமே ஒரு முடிவு செய்தாக வேண்டும்.

ஷேக் அப்துல்லா இந்தியாவிலிருந்து தப்பி ஓடி அவருக்கு சீனா அடைக்கலம் அளித்து இடந்தந்து, இந்தியாவிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய அனுமதித்தால், நாம் என்ன சொல்வோம்? நமது ஆவேசம் கரைபுரண்டு ஓடாதா? இதே போன்றதொரு வேலையில் தானே இன்று தலாய்லாமா ஈடுபட்டிருக்கிறார்? இந்த உண்மையைப் பிரதமர் நேரு அவர்கள் ஒப்புக் கொண்ட போதிலும் 'தலாய்லாமாவே! போதுமையா உம் திருப்பணி! உம் வாயை மூடும்! மூட முடியாவிட்டால் வெளியேறும்" என்று மரியாதையுடன் அவருக்கு வற்புறுத்திச் சொல்லத் தயக்கமேன்?

கேரள சர்க்கார் காரியாலயம் வாசகசாலையாகக் காட்சியளிக்கிறது

சர்க்கார் ஊழியர்கள் அலுவலின்றி பத்திரிகை வாசிக்கின்றனர்!

திருவனந்தபுரம், செப். 12 ஜனாதிபதி ஆட்சியின்கீழ் ஆலோசகர் நியமனத்தில் தாமதம் ஏற்பட்டிருப்பதால் கேரள சர்க்கார் அலுவலகத்தில் வேலைகள் சரிவர நிறைவேறவில்லை. ஆலோசகரின் வருகையை எதிர்பார்ப்பதால், முக்கிய தஸ்தாவேஜுகள் பேரில் முடிவுகள் எடுப்பதும் தாமதப்பட்டு வருவதாக நம்பகமாக அறியப்படுகிறது.

காரியதரிசிகள் உள்பட பெரிய ஆபீசர்கள் சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால் சர்க்கார் அலுவலகத்திலுள்ள ஊழியர்கள் தினசரி பத்திரிகைகளை வாசித்த வண்ணம் காலம் கழித்து வருகிறார்கள். [illegible] ஆலோசகரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மைசூர் சர்க்காரின் பிரதம காரியதரிசி திரு. பி. வி. ஆர். ராவ் ஆலோசகராக நியமனம் செய்யப்படுவாரென்று கூறப்பட்டாலும் உத்தியோக பூர்வமான அறிக்கை எதுவும் வெளிவரவில்லை. (ஐ பி ஏ)

கைது செய்யப்பட்ட போலீஸ்காரர்கள் ரிமாண்டு செய்யப்பட்டனர்

சேலம், செப். 10— சேலம் ஜங்ஷன் சூரமங்கலம் போலீஸ் ஸ்டேஷனை சேர்ந்த புவனு, செங்கோடன் என்ற போலீஸ்காரர்கள் 5-9-59ல் கைது செய்யப்பட்டார்கள். அன்று மாலை மற்றொரு போலீஸ்காரரான [illegible] கைது செய்யப்பட்டார். இவர்கள் 7-9-59ல் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர். [illegible] என்ற பெண்ணையும், [illegible] ராம என்பவரையும் மிரட்டி பணம் வாங்கியதாக குற்றம் பதவு செய்யப்பட்டு தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு [illegible] தெரிகிறது. —ந. உ

கேரளத்தில் பலாத்கார தாண்டவம்

கடமையில் தவறுகிறார் கவர்னர்

ஏழை விவசாயிகள் வீடுவாசல்களை விட்டு வெளியேறுகின்றார்கள்

தொழிலாளர் கூட்டுறவுகளையும் நாசமாக்க முயற்சி

தோழர் எம். என். கோவிந்தன் நாயர் கண்டனம்

திருவனந்தபுரம், செப். 12— "கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்ட பிறகு கவர்னர் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கத் தவறிவிட்டார். கடந்த ஒரு மாதகாலமாக கொலை, கொள்ளை, தீவைத்தல், நபர்களைத் தாக்குதல் முதலிய பலாத்கார குற்றங்கள் நிகழ்ந்தவண்ணமாக இருக்கின்றன" என்று கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள ராஜ்ய கமிட்டியின் செயலாளர் தோழர் எம். என். கோவிந்தன் நாயர் அறிவித்தார்.

கேரள அரசியல் நிலவரம் குறித்து தோழர் கோவிந்தன் நாயர் செய்தி நிருபர்கள் மகாநாட்டில் விளக்கிக் கூறினார். அவர் சொன்னதாவது:— "காங்கிரஸ்-பி.சோ., இதர எதிர்க்கட்சிகள் ஆரம்பித்த கலவர இயக்கத்தினால் விளைந்த அசாதாரண நிலைமையை மாற்றி சகஜ நிலைமை ஏற்படுத்தக் கவர்னரும் அவரது ஆலோசகரும் தவறிவிட்டனர். காங்கிரஸ் [illegible] அரசியல் கட்சிகளும் விசேஷ முயற்சிகள் எடுத்தாலொழிய, மோசமாகியுள்ள நிலைமை மாறி ராஜ்யத்தில் சமாதான சூழ்நிலை ஏற்பட முடியாது.

இந்த ராஜ்யத்தில் சமாதானம் ஏற்படுத்த வழிமுறைகளைக் காணக் கவர்னர் கூட்டிய மகாநாடு அபஜயமுற்றது.

நிலைமை மோசமாகிவருகிறது

[illegible] அமைதியாக நடந்துகொள்ளும்படி கேரள மக்களுக்கு [illegible] ஒரு வேண்டுகோள் விடுக்க வேண்டும் [illegible] கம்யூனிஸ்ட் கட்சி [illegible] யோசனையை காங்கிரஸ், பி. சோ., முஸ்லீம் லீக் ஸ்தாபனங்கள் நிராகரித்துவிட்டன. இவ்வித நிராகரிப்பால் நிலைமை [illegible].

ஏழை குடும்பங்கள் தங்கள் வீடு வாசல்களுக்குத் திரும்ப முடியாது.

பலாத்கார குற்றங்கள் அதிகரிப்பு

கடந்த ஒரு மாத காலமாக இந்த ராஜ்யத்தில் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சமூக விரோத சக்திகளின் விஷமக்கனம் ஓயவில்லை, கொலைகள், தீ வைத்தல், கொள்ளை தனிநபர் மீதும் பொதுக்கூட்டங்கள் மீதும் பலாத்காரத் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் ஒரு போலீஸ் அதிகாரி தமது வீட்டில் கொலைப்பட்டுக் கிடந்தார். திருவல்லாவில் ஒரு கல்லூரி மாணவி மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டார். இன்று கேரள மக்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி கூட்டங்கள் மீது தாக்குதல்

கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் திரும்பத் திரும்ப தாக்கப்பட்டு வருகின்றன. கடைசியாக இ. எம். எஸ்.ஸுக்கு நடந்த வரவேற்பின் போதும் காங்கிரஸ்காரரும் கலவர இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் தாக்குதல் நடத்தினர். 67 கம்யூனிஸ்டுகள் அல்லது ஆதரவாளர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் [illegible]. ஆஸ்பத்திரியில் காயமடைந்தவர்களைக் காணச் சென்ற தோழர் ஏ. கே. கோபாலனும் தாக்கப்பட்டார்.

பிரஜா சுதந்திரங்கள் மறுப்பு

ஜனாதிபதி ஆட்சியின் கீழ், மக்களுக்குப் பிரஜா சுதந்திரங்கள் [illegible] ஜனாதிபதி ஆட்சியின் மறுப்பு [illegible] செயல் [illegible].

முன்பிருந்த சர்க்காரின் முடிவுகளையும் கொள்கைகளையும் மாற்றுவது ஜனாதிபதி ஆட்சியின் மறு உருவும் அம்சமுமாகும். காபந்து சர்க்காருக்குக் கொள்கைகளை மாற்ற அதிகாரமில்லை.

கல்விச் சட்டம்

[illegible] கல்விச் சட்டத்தை [illegible] கவர்னர் ஆலோசகர்கள் [illegible] கவர்னர் [illegible] ப்படும் வருகிறார்.

தொழிலாளர் கூட்டுறவுகளுக்கு ஆபத்து

தொழிலாளரின் கூட்டுறவுகளை நாசம் செய்யவும் திட்டவட்டமான முயற்சிகள் நடக்கின்றன. கள்ளிறக்கும் தொழிலாளர் கூட்டுறவு இயக்கத்தைப் பாழாக்கவும் சர்க்கார் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

ஆலப்புழை ஜில்லாவில் பஸ் தொழிலாளர்கள் ஒரு கூட்டுறவை ஆரம்பித்து, பஸ் போக்குவரத்தை நடத்திவருகிறார்கள். இம்முயற்சிக்கு கம்யூனிஸ்ட் மந்திரிசபை ஆதரவு அளித்தது. அந்தப் பஸ்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு ஸ்தாபன சொத்தும் சேதப்படுத்தப்பட்டு வருகிறது.

கம்யூனிஸ்ட் மந்திரிசபை அமைத்த ராஜ்ய படகு போக்குவரத்தை கலைத்துவிடவும் முயற்சி நடக்கிறது. காபந்து சர்க்கார் இவ்விதம் நடக்கவே கூடாது. இது மாகாண சுய ஆட்சிக்குப் பங்கமேயாகும்.

வாக்காளர் ஜாபிதாக்களில் மோசடி

வாக்காளர் ஜாபிதாக்கள் தயாரிப்பிலும் பொய்வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரென்றும் ஒரு கிராமத்தில் 3000 வாக்காளரில் 800 பொய்ப் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளனவென்றும் தோழர் எம். என் கோவிந்தன் நாயர் கூறினார். கம்யூனிஸ்ட் கட்சியின் முயற்சியால் அந்த பொய்ப்பெயர்கள் நீக்கப்பட்டன. வயதுவராத சிறுவர் சிறுமியர் பெயரும் வாக்காளர் ஜாபிதாவில் இடம் பெற்றுள்ளன. இவ்வித தவறுகள் திருத்தப்படுவதுடன், நியாயமான முறையில் தேர்தல் நடப்பதற்கு அமைதி அவசியம். அமைதியை நிலைநாட்டவேண்டுவது அரசாங்கத்தின் கடமை என்று முடித்தார் கோவிந்தன் நாயர்.

இந்திய-மங்கோலிய நட்புறவு பலப்படும்

மங்கோலியப் பிரதமர் நம்பிக்கை

புதுடில்லி, செப். 11— "இந்திய-மங்கோலிய குடியரசுகளின் நட்புறவு மேலும் மேலும் வளர்ந்து, பலப்படும் என்று நம்புகிறேன்" என்று இந்தியாவிற்கு வருகை தந்திருக்கின்ற மங்கோலிய முதலமைச்சர் நேற்று கருத்துத் தெரிவித்தார். ராஷ்டிரபதி பவனில் அவரை கௌரவிப்பதற்காக நேரு அளித்த வரவேற்பு விருந்தின்போதே அவர் அவ்வாறு கூறினார். வரவேற்பில் இசை நிகழ்ச்சிகளும், நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன.

மங்கோலிய பிரதமர் தமது வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், "மிகப் பெரிய சர்வதேசப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண்பதற்கு இந்தியா எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் நாங்கள் பாராட்டுகிறோம். சமாதானத்தை விரும்பும் ஆசியாவின் மிகப் பெரிய இரு தேசங்கள் பஞ்சசீலக் கொள்கையைப் பிரகடனம் செய்தது ஆசியாவின், ஏன் உலகத்தின் சமாதானத்தைப் பாதுகாப்பதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தது." என்று கூறினார். [illegible] மங்கோலியாவிற்கு இந்தியப் பிரதமர் வருகை தரவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

திருச்சி தமிழ் எழுத்தாளர் 4-வது மகாநாடு

திருச்சி, செப். 13— திருச்சி, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நான்காவது வருடாந்திர மகாநாடு இன்று இங்கு நடைபெற்றது. டில்லி தேசிய பௌதிக சோதனைக்கூடத்தின் டைரக்டர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

நவீன விஞ்ஞானக் கருத்துக்களை வெளியிடுவதற்கு இந்திய மொழிகளில் எளிய, தெளிவான, திட்டவட்டமான வசனநடை அபிவிருத்தியடைய வேண்டிய அவசியத்தை டாக்டர் கிருஷ்ணன் வலியுறுத்தினார்.

திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவுள்ள திரு. டி. அய்யம்பெருமாள் கோனார் மகாநாட்டைத் துவக்கிவைத்து, மக்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்குவது எழுத்தாளர்களின் கடமை என்றார்.

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனுக்கு, திருச்சி, ஸ்ரீரங்கம் நகரசபைகளின் சார்பில் தனித்தனி வரவேற்பு உபசாரங்கள் நடத்தப்பட்டன.

கம்யூனிஸ்ட் விவசாய சங்க ஊழியர் பஞ்சாயத்துத் தலைவராக தேர்வு

பட்டுக்கோட்டை, செப். 10— மென்னகம் கிராமப் பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் பரமசிவம் தாலுகா கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே. துரைராஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வலசை கிராமப் பஞ்சாயத்திற்கு விவசாய சங்க ஊழியர் வேலு என்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கேரள தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டியிடாது

ராஜாஜி அறிவிப்பு

மதுரை, செப். 13— கேரள ராஜ்யத்தில் நடக்கப்போகும் தேர்தலில் எந்த ராஜ்யத்திலும் நடைபெறும் இடைத் தேர்தல்களிலோ சுதந்திரக் கட்சி போட்டியிடாது என்று இன்று ராஜாஜி செய்தி நிருபர்களிடம் கூறினார்.

கேரளத்தில் தலையீட்டை எதிர்க்கவும் கேரள மக்கள் தனது சச்சரவுகளைத் தானே தீர்த்துக் கொள்ளும்படி விட்டுவிடவும் சுதந்திரக் கட்சி முடிவு செய்திருப்பதாகவும் ராஜாஜி அறிவித்தார்.

தொழிலாளர்களின் இன்ஷ்யூரன்ஸ பணம் முதலாளிகள் ஏப்பம் விடுகிறார்கள்

டி. சி. என். மேனன், இலியாஸ், எஸ். எம். பானர்ஜி குற்றச்சாட்டு

புதுடில்லி, செப். 9— தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் திருப்திகரமான முறையில் நடைபெறவில்லை என்று மத்திய தொழில் மந்திரி குல்ஜாரிலால் நந்தா இன்று லோகசபைக் கூட்டத்தில் தெரிவித்தார். அதனால் இதைப் பற்றி விசாரித்து அறிய கரு. ஏ. லெட்சுமணசாமிமுதலியாரைக்கொண்ட குழுவை அமைக்கப்பட்டிருப்பதாகவும், அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் முறை பற்றி குற்றம் குறைகள் கூறுகிறவர்கள் அவரிடம் தம் கருத்துக்களைக் கூறலாமென்றும் கூறினார்.

சென்ற வருடத்திய அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் வருடாந்திர அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கு கொண்டோரில் பெரும் பகுதியினர் [illegible] குறைபாடுகளைப் பற்றி கடுமையாக விமர்சித்தனர்.

டி. சி. என். மேனன்

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் டி. சி. என். மேனன் பேசுகையில், சட்டப்படி முதலாளிகள் செலுத்த வேண்டிய தொகையை முதலாளிகள் கொடுப்பதில்லை யென்றும், ஆனால் தொழிலாளர்கள் தமது பங்கைச் சரிவர செலுத்துகிறார்களென்றும், இந்தத் திட்டத்தால் தொழிலாளர்களுக்கு முழு நன்மையும் கிடைக்காவிட்டாலுங்கூட, இதன் முழு பாரமும் தொழிலாளர்கள் மீதுதான் விழுகிறதென்றும் கடந்த 7 ஆண்டுகளில்மாத்திரம் 10 கோடி ரூபாய்வரை தொழிலாளர்கள் செலுத்தியிருப்பதாகவும் ஆனால் 8 கோடி ரூபாய்வரைதான் அவர்களுக்காகச் செலவிடப்பட்டதென்றும், [illegible] காரியமான இவ்விஷயத்தில், அதன் மூலம் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஏராளமாக ரிசர்வ் நிதி சேர்த்து அம்மாக லாபத்தைக் குவித்து வருவதாகவும், ஆனால் வர்த்தக நோக்கமுள்ள அரசாங்கத்தானிய வியாபாரத்தைக் காட்டிலும் அதிக லாபம் பெறாவிட்டாலும் நோக்கமுள்ள இன்ஷ்யூரன்ஸ் விஷயத்தில் தொழிலாளர் பணத்தை [illegible] புகார் சாட்டினார்.

"பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய பெரும் நகரங்களில் இந்த வருட முடிவுக்குள் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் இன்ஷ்யூரன்ஸ் [illegible] வியாபாரம் மேன்மேலும் [illegible] விளாசினார்.

பாரபட்சம்

அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் விவாதத்தில், ஏ. ஐ. டி. யு. சி. சங்கத்தினருக்கு எதிராக பாரபட்சம் காட்டுவதாகவும், கார்ப்பரேஷன் நிர்வாக கமிட்டிகளில் ஏ. ஐ. டி. யு. சி. பரதிநிதிகளுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுவதில்லையென்றும் கூறினார்.

மலை விழுங்கிகள்

கம்யூனிஸ்ட் அங்கத்தினர் தோழர் எம். இலியாஸ் (மேற்கு வங்கம்) பேசுகையில், மேற்கு வங்காளத்தில் அநேக முதலாளிகள், தொழிலாளர்கள் அளித்த இன்ஷ்யூரன்ஸ் பணத்தை விழுங்கி விடுவதாகவும், ஆனால் அந்த புகார்கள் மீது சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லையென்றும் கூறினார்.

150 லட்சம் பேர்களில் 15 லட்சம் பேர்களே

தோழர் எஸ். எம். பானர்ஜி பேசுகையில், "பதிவு செய்யப்பட்ட 150 லட்சம் தொழிலாளர்களில் 15 லட்சம் பேர்தான் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், இதன் குறைகளை அறிய ஒரு கமிஷன் ஏற்படுத்தவேண்டுமென்றும் பேசினார்.

சென்ற வாரத்திய நடப்பு:

மணிலாப்பயறு எண்ணெய் விலைகள் ஏற்றம்

தோல் மார்க்கெட் அழுத்தம்

சென்ற வாரம் மணிலா பயறு வரத்து [illegible] பஜாருக்கு 25 முதல் 30 டன்கள் வரை வந்தது. கோடை, மணிலாப்பயறு வரத்து சென்ற வாரத்தைவிட மேலும் குறைந்தது. விழுப்புரம், பண்ருட்டி, கடலூர் மார்க்கெட்டுகளுக்கு வரத்து சுமாராக இருந்தது. [illegible] ரூ. 195 முதல் 196 ஆக இருந்த விலை [illegible] ரூ. 202 முதல் 203 ஆக [illegible] ரூ. 191 முதல் 192 ஆக [illegible] ரூ. 197 [illegible] ரூ. 198 ஆக [illegible].

மணிலா எண்ணெய்க்கும் [illegible] (550 ரூ.) [illegible] ரூ. 350 [illegible].

நாக்பூர் மாஜுவில் வரத்து சென்ற வாரம் போல இருந்தது. விலைகள் உறுதியாக இருந்தன. இடைக்கால சரக்கு உடனடியாக வாங்கப்பட்டது. ஏற்றுமதி வியாபாரத்தின் இங்கி [illegible].

[illegible] விலைகள் [illegible] 6 7 ரூ [illegible] 7-8 [illegible].

பங்களூரில் மங்கோலியப் பிரதமர்

பங்களூர், செப். 13— மங்கோலியப் பிரதம மந்திரி [illegible].

நிலச் சீர்திருத்தம் கோரி பாதயாத்திரை

கம்யூனிஸ்ட் தோழர்கள் கிராமங்கள் தோறும் சென்றனர்

எங்கும் பஞ்ச நிலைமை!

போடிநாயக்கனூர், செப். 8— போடிநாயக்கனூரிலிருந்து, நிலச்சீர்திருத்தத்தை அமுலாக்கக் கோரும்படி வற்புறுத்த இருபது தோழர்கள் சுமார் அறுபது மைல் நடந்து 33 கிராமங்களுக்குச் சென்றனர். செங்கொடி தாங்கி சென்ற தோழர்களை கண்டதும் கிராம மக்கள் கரைபுரண்ட உற்சாகத்தோடு வரவேற்றனர். [illegible] விலைவாசி உயர்வால் பட்டினி [illegible] கிராம மக்கள் கூறினர். [illegible] சிறு குழந்தைகள் [illegible].

[illegible] கிராம மக்கள் கூறினர். [illegible] திட்டத்தின் மூலமாக [illegible] கிராம விவசாயிக்கும் [illegible] கிடைக்கவில்லை; [illegible] திறக்கப்படவில்லை. [illegible] பாதயாத்திரை சென்ற தோழர்களை [illegible] கிராமங்களின் [illegible] விருப்பம் [illegible] அரசாங்கத்திற்கு [illegible] ஆக இருக்கும்படி கிராம மக்கள் பாதயாத்திரை சென்றோரை கேட்டுக்கொண்டனர். (ந. உ)

வி. சங்க அமைப்புக் கமிட்டி

பாண்டி, செப். 8— செம்பியமங்கலத்தில் 2-9-59 [illegible].

காங்கிரசிற்கு ஓட்டுப்போடாத கிராமத்திற்கு தண்ணீர் இல்லையாம்!

காங்கிரஸ்காரர்கள் பிரச்சாரத்தைக் கண்டித்து வி. ச. தலைவர் அறிக்கை

சிவகங்கை, செப். 10— வைகை அணைக்கட்டுத் தண்ணீர் காங்கிரசிற்கு வாக்கு அளிக்காத கிராமங்களுக்கு வழங்கப்படாது எனவும், தங்கள் முயற்சியாலேயே தண்ணீர் கொண்டு வரப்போவதாகவும் சிவகங்கைப் பகுதியில் காங்கிரஸ்காரர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். அவர்களது பிரச்சாரத்தைக் கண்டித்தும், உண்மை நிலையை விளக்கியும் தாலுகா விவசாய சங்கத் தலைவர் தோழர் வி. ஆர். அய்யாததுரை அறிக்கை விட்டிருக்கிறார், அவ்வறிக்கையில் அவர் கூறுவதாவது:

"சமீபத்தில் கட்டிமுடிக்கப்பட்ட வைகை அணைத்திட்டத்தின் மூலம் சிவகங்கை தாலுகா பகுதிக்குக் கொடுக்கப்பட இருக்கும் நீர்ப்பாசனத்தில் தாலுகா காங்கிரஸின் பாரபட்சமான போக்கு இந்தத் தாலுகாவில் பெரும் அதிருப்தியும், பரபரப்பும் ஏற்படுத்தியுள்ளது."

"குறிப்பாய் இந்தத் தண்ணீர் தங்களின் முயற்சியால்தான் வருவதாகவும், பொதுத் தேர்தலில் காங்கிரஸிற்கு விரோதமாக ஓட்டுப் போட்டுள்ள கிராமங்களுக்கும், காங்கிரஸிற்கு எதிராக வேலை செய்த நபர்கள் உள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் இல்லையென்று பகிரங்கமாகக் கூறுவதோடு, ஒற்றுமையாக இருக்கும் கிராமங்களை பிளவுபடுத்துவது கிராமத்திற்கு கிராமம் சண்டை மூட்டுவது போன்ற நடவடிக்கைகளோடு, காங்கிரஸ் கொடியையும், காங்கிரஸ் அரசியலையும் ஏற்றுக்கொள்ளும் கிராமங்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்குமென்று நிர்ப்பந்தம் செய்து வருகின்றனர்."

"ஆகவே, இதன் உண்மை விபரங்களை சிறிது விளக்குவது கூடியதாக இருக்கும். வைகை அணைக்கட்டிலிருந்து இராமநாதபுரம் ஜில்லாவுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் தண்ணீரை சிவகங்கை பகுதியில் உள்ள [illegible] வாய்க்கால்களுடன் இணைக்கப்படும் [illegible] இப்போதைக்குத் தண்ணீர் விடுவது என்று முடிவாகியிருக்கிறது. மதுரை ஜில்லா நீர்ப்பாசனத்திற்கு பெரியாற்று தண்ணீர் கொண்டுவரக்கூடிய காலத்திலேயே, மேலூர் தாலுகாவை ஒட்டிய சிவகங்கை தாலுகாவில் உள்ள [illegible] கால்வாய், [illegible] கால்வாய்கள் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், போதிய அளவு தண்ணீர் இல்லாததின் காரணமாக, தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் மாத்திரம் இக்கால்வாய்களில் சுமார் 6 000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களுக்கு அணைக்கட்டு தண்ணீர் விடப்பட்டு [illegible] அணைக்கட்டு தண்ணீர் விடப்படாமல் [illegible] நீர்வரும் [illegible].

"இப்பேர்ப்பட்ட நீண்டகால மான கோரிக்கை, ஒப்பந்தப் பிரதிநிதிகளாக அணைக்கட்டு தண்ணீர் விடும் மாமூல் வழக்கம் இருந்து வந்ததின் அடிப்படையில்தான் இப்பொழுது வைகை அணைத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் உபரித் தண்ணீரை இப்பிரதேசத்திற்கு மேற்படி கால்வாய்கள் மூலம் திறந்து விடப்பட்டிருக்கிறது."

"உண்மை இவ்வாறிருக்க, தங்கள் ஆதரவைப் பெறுதவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் தண்ணீர் விடமாட்டோம் என்று இரகசியமாக பிரச்சாரம் செய்து வந்ததோடு, 27-8-59-ம் தேதியன்று திறப்பு விழாவுக்கும், மந்திரியை வரவேற்பதற்குமாக ஏக்கருக்கு 0-6-0 அணா வீதம் 6,000க்கும் அதிகமான ஏக்கருக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வசூல் செய்து சென்ற 27-8-59-ந்தேதியன்று சென்னை ராஜ்ய மராமத்து இலாகா மந்திரி கனம் கக்கன் மேற்படி கால்வாயைத் திறந்து வைத்தார்கள். அன்று படோடோபமான விருந்துகளுக்கு ஏற்பாடு ஆகியிருந்தது. திறப்பு விழா நடைபெற்றதும், திறப்பு விழாச் செய்யும்போது தண்ணீரில்லை! ஒரு இடத்தில் குடத்திலிருந்து தண்ணீர் ஊற்றியும், சில இடத்தில் திறந்து விடும்போது தண்ணீர் கால்வாயில் ஓடாத நிலையும் இருந்திருக்கிறது. இன்று வரை குறிப்பிட்ட கிராமம் எதற்கும் தண்ணீர் வந்ததாகத் தெரியவில்லை. அப்படிமான தேர்தல் கண்ணோட்டத்துடன் இப்படி இந்த ஜனநாயக பிரச்சினையை சூதாடுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை மற்றி இந்தப் பகுதி மக்கள் கூர்மையாக விவாதித்து வருகிறார்கள்."

தமிழ்நாடு முனிசிபல் பஞ்சாயத்து பிரதிநிதிகள் மாநாடு

தஞ்சாவூரில் செப். 20-ல் நடைபெறும்

சென்னை, செப். 14— தமிழ்நாடு தொழிற்சங்கக் காங்கிரஸின் [illegible] முடிவுப்படி தமிழ்நாடு முனிசிபல், பஞ்சாயத்து தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் [illegible] மாநாடு தஞ்சாவூரில் 20-9-59 [illegible] காலை 9 மணிக்கு [illegible] தஞ்சை [illegible] தலைமையில் [illegible] நடைபெறும். [illegible] பிரச்சினைகள் [illegible] சர்க்காருக்கு [illegible] தலைவர்களும் ஒத்துழைக்க [illegible] தோழர் ஒருவர் அவ்வாறு [illegible].

[illegible] கோரிக்கை கேட்டுக் கொள்ளுகிறேன். கூட்டம் காலை 9 மணிக்கு [illegible] ஆரம்பிக்கப்படுமாகையால் எல்லாப் பிரதிநிதிகளும் முன்னதாகவே தஞ்சாவூர் ராஜா சத்திரத்திற்கு வந்துசேரவும்.

கே. எம். சுந்தரம், காரியதரிசி, டி. என். டி. யு. சி.

சந்திரனில் சோவியத் ராக்கெட்! உலகமே வியக்கிறது!

முந்த்ராவுக்கு ஆறு ஆண்டுகள் சிறை!

ரூ. 2 லட்சம் அபராதம்

கல்கத்தா, செப். 14—

மோசடிக்கார பாங்கு மார்க்கெட் முதலாளி முந்த்ராவுக்கு இன்று விசேஷ ஜில்லா செஷன்ஸ் நீதிபதி திரு. பி. பி. மித்ரா 'இந்தியன் பினல்கோட்' 120-வது பிரிவின் கீழ் 4 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ. 2 லட்சம் அபராதமும் விதித்தார். அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் விதித்தார்.

இ. பி. கோ. 471, 467-வது பிரிவுகளின் கீழ் மற்றும் இரண்டு குற்றங்களுக்காக நீதிபதி மதுபா ஆறு. ஆறு வருடங்கள் தண்டனை விதித்தார்.

இரு தண்டனைகளும் ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டும்.

இதுவரை ஜாமீனில் இருந்து வந்த முந்த்ராவை உடனே கைது செய்து கொள்ளும்படியும் உத்தரவிட்டார்.

கான்பூரிலுள்ள பிரிட்டிஷ்-இந்தியா கார்பொரேஷன் என்ற கம்பெனியிடம் போலியான தஸ்தாவேஜுகளை உண்மையென்று காட்டி ஏமாற்றி மோசடி செய்ததாகவே முந்த்ரா மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முந்த்ராவை ஒரு லட்சம் ரூபாய் ஜாமீனில் அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி விடுதலை செய்தார்.

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறியதற்குக் கண்டனம்

கவர்னருக்கு எதிராக கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

சேலம், செப். 12—

சேலம் நகரக் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் தோழர் ஜி அஹமத் தலைமையில் 12-9-59 மாலை நடைபெற்றது. நகரக் கமிட்டி செயலாளர் தோழர் கே. செல்லப்பன் பேசினார். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

"சேலம் நகரிலும், ஜில்லாவிலும் விலைவாசி உயர்வின் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். படிப்படியாக விலைவாசி உயர்ந்துவருவதன் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்க்கவும், நியாயவிலை நிர்ணயம் செய்யவும் நியாய விலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கவும் காங்கிரஸ் சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதைக் கண்டிக்கும் அடிப்படையில் ராஜ்ய கவர்னர் இம்மாத மூன்றும் வாரத்தில் சேலத்திற்கு வரும்போது அவருக்கு எதிராகக் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தலாம் என முடிவு செய்கிறது." —க-கி.

வங்க அடக்குமுறைக்கு கண்டனம்

காலார் கங்கவடல், செப். 10—

செப். 2ல் நடைபெற்ற மாரிச்சம்பம் கில்பர்ட்ஸ் டவுதி கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் கூட்டத்திலும், 6-9-59ல் நடைபெற்ற சாம்பியன் பகுதி கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் கூட்டத்திலும் மே. வங்க காங்கிரஸ் சர்க்கார், உணவு இயக்கத்தின்மீது நடத்திய மிருகத்தனமான அடக்குமுறையையும், துப்பாக்கிப்பிரயோகங்களையும் வன்மையாகக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

...ஞ்சு எதிர்ப்புக் கமிட்டித் தலைவர்களுடன் வங்க சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்தும்படி கோரப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகங்களில் உயிர் நீத்த தியாகிகளின் குடும்பத்தார்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இன்றைய சினிமா

...க்கோட்டை: பழனியப்பா டாக்கீஸில் "மரகதம்"

...யலூர்: நடராஜா டாக்கீஸில் ...பாண்டிய கட்டபொம்மன்

மார்க்கெட் நிலவரம்

சென்னை, செப். 15—

...ன்	ரூ. 80-0-0
...கம் (ரெடி)	ரூ. 124-4-0
...ச தங்கம்	ரூ. 122-0-0
...ள்ளி 100 தோலா எடை	ரூ. 207-8-0
...ள்ளி 1 ரூ. எடை	ரூ. 8-1-6

மணிலா பயறு

...ராத்தல் கொண்ட ...ரம் 1-க்கு உயர்ந்த

...கம்	ரூ. 202-00
...யம்	ரூ. 195-00

மணிலா எண்ணெய்

...ரா. கொண்ட பாரம் ...க்கு எக்ஸ்பெல்லர் ...டி மதராஸ் கிடங்கு ...டெலிவரி (8 F.F.A.) ...மொத்தவிலை) ரெடி ரூ. 362-00/363

...டம்பர்	ரூ. 362-00
...டோபர்	ரூ. 345-00
...பர்	ரூ. 3[illegible]5-50

விளக்கெண்ணெய்

...ரா. பாரம் 1-க்கு (மத...ஸ் கிடங்கு டெலிவரி)

...ருப்பத்தூர்	ரூ. 820-00
...ம் தாமரை அன்னம் ...ரா. டின் விலை	25-50

தேங்காய் எண்ணெய்

...ரா. கொண்ட பாரம் ...க்கு (விற்பனை வரி ...ட்பட) கொல்லம் ...க்கு

...ம். எஸ். மார்க்கு	40 75
...ம்பு மார்க்கு	39-50
...ஜா மார்க்கு	39-50

சர்க்கரை (8 அந்தர்)

...ன்	118-00
...ரு	118-00
...கோட்டை	118-00

ஆந்திர பாங்கு ஊழியர் கொலை வழக்கு

எதிரிகள் வாக்குமூலம்

சென்னை, செப். 14—

இன்று ஆந்திர பாங்கு ஊழியர் கொலை வழக்கில் முதல் எதிரியான கே. நாராயணசாமி வாக்குமூலம் அளித்தான். 'ஆந்திர பாங்கு ஊழியர் எம். எஸ். சூரியநாராயணா கடந்த நவம்பர் மாதம் 14ந் தேதி எஸ்பளனேட்டில் எனது காருக்குள் ஏறிக்கொண்டது உண்மையே. நான் அந்தக் காரை ஓட்டியதுபற்றி காருக்குள் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. கார் ஹைகோர்ட்டு லெவல் கிராஸிங்கைக் கடந்த பிறகு பின்னாலிருந்து சப்தத்தைக் கேட்டேன். ஏதோ சச்சரவு நடந்தது. நான் காரை மெதுவாக ஓட்டினேன். கடுமையாக உதவு கடக்கவில்லை. ஆகவே நான் மீண்டும் காரை ஓட்டினேன். மூன்றாவது எதிரியான யோகியும் சூரியநாராயணாவும் சண்டையிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். யோகியின் கையில் கத்தி இருந்தது. நான் காரை நிறுத்தக்கூடாதென்று யோகி கத்தியைக்காட்டி மிரட்டினார். பிறகு யந்திரக் கோளாறால் கார் நின்றது.'

குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு

சதி செய்தல், சூரிய நாராயணாவைக் கடத்தல், கொள்ளை அடித்தல், கொலை செய்தல் என்ற குற்றச்சாட்டுகளை எதிரிகள் நாராயணசாமியும் விஜயகுமாரும் மறுத்தனர்.

சூரிய நாராயணாவைப் பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாதென்றான் எதிரி விஜயகுமார்.

ஒழுங்கு நடவடிக்கை

சேலம், செப். 12—

தோழர் டி. சேவியப்பன் கட்சிக் கமிட்டியின் முடிவுகளை மீறியும், ஒழுங்கீனமாகவும் நடந்துகொண்டதால் அவர் கட்சிப் பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், கட்சி உறுப்பினர் பதவியிலே இருந்தும் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாகவும் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரக் கமிட்டி செயலாளர் கே. செல்லப்பன அறிவிக்கிறார். —க-கி.

சோவியத் விஞ்ஞானத்தின் அரிய முன்னேற்றம்

உலக விஞ்ஞானிகளின் பாராட்டு

சந்திரனில் மனிதனை இறக்குவதிலும் அமெரிக்காவை சோவியத் ரஷ்யா முந்திவிடும்

மாஸ்கோ, செப். 14—

சோவியத் விஞ்ஞானிகள் வானை அளந்து, சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிந்து, சந்திரனுக்கே ராக்கெட் ஒன்றை அனுப்பி வெற்றி கண்டுதானது உலக மக்களை ஆச்சரியப் படச் செய்திருப்பதோடு அளவில்லா மகிழ்ச்சியையும் உண்டுபண்ணியிருக்கிறது.

சோவியத் சாதனையை உலக விஞ்ஞானிகள் வானளாவப் புகழ்ந்து கூறிவருகின்றனர். பூமியிலிருந்து 2 லட்சத்து 40 ஆயிரம் மைல் தொலைவிலுள்ள சந்திரனுக்குக் குறி இம்மியும் தவறாமல், கணித்த நேரத்தின்படி ராக்கெட் ஒன்றை அனுப்பி வெற்றி கண்டதானது சோவியத் விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றின் ஈடு இணையற்ற முன்னேற்றத்திற்குச் சான்று ஆகுமென்று விஞ்ஞானிகள் பாராட்டுகின்றனர்.

சோவியத் ராக்கெட் பூமியிலிருந்து சந்திரனை அடைய 34 மணி நேரம் பிடித்தது.

ரஷ்யாவின் இந்த சாதனையால் மனிதன் சந்திரனுக்குப் பிரயாணம் செய்யும் நாளை நெருங்கிவிட்டது என்று சோவியத் யூனியனின் கிரகங்கள் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் விக்டர் பாஸின் அறிவித்தார்.

"சந்திரனின் மேற்பரப்பு கரடு முரடானது; அந்தக் கிரகம் காற்று, தண்ணீர் முதலிய வாழ்க்கைக்கு அத்யாவசிய தேவைகள் இல்லாதது.

"சந்திரனின் நடு மத்தியபாகத்திற்கு வடமேற்கே கடல் இருக்கிறது. தொலை நோக்கி மூலம் பார்த்தால் கண்ணுக்குக் கருப்பாகக் காட்சி அளிக்கும் சமவெளி சந்திரனில் உள்ளது. அந்தச் சமவெளியில் தான் ரஷ்ய ராக்கெட் இறங்கியிருக்கவேண்டும்" என்றும் பாஸின் கூறினார்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பாராட்டு

லண்டன், செப். 14—

சோவியத் ராக்கெட் சந்திரனை அடைந்த மாபெரும் சாதனையைப் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

அந்த ராக்கெட்டின் சமிக்ஞைகளைக் கடைசிவரையில் தொலைநோக்கிக் கருவிகள் மூலம் ஆரம்பம் முதல் கடைசி வரையில் பார்வையிட்ட ரேடியோ டெலஸ்கோப டைரக்டர் பேராசிரியர் ஏ. சி. பி. லோவெல் கூறியதாவது, "சோவியத் விஞ்ஞானம், தொழில் நுட்பம் இவற்றின் முன்னேற்றத்தை இச்சாதனை காட்டுகிறது."

"அற்புதம்" என்றார் ராயல் சங்கத்தின் ராக்கெட் சப் கமிட்டி அக்ராசனர் எம். எஸ். டபுள்யூ மாஸே.

இம்மியும் தவறாமல் திட்டமிட்டபடி சோவியத் ராக்கெட் சந்திரனை அடையுமாறு செய்தது ஈடு இணை அற்ற சாதனை என்றும் மாஸே கூறினார்.

மிகப் பிரம்மாண்டமான வெற்றி என்றார் டாக்டர் டி. சி மார்ரோயின்.

சரித்திர விசேஷம் வாய்ந்தது

சோவியத் ராக்கெட் சந்திரனை அடைந்தது மனித குலசரித்திரத்தில் மிக்க விசேஷம் வாய்ந்த தருணமாகும் என்றார் பிரிட்டிஷ் கிரகங்கள் ஆராய்ச்சி சங்கத்தின் தலைவர் கென்னெத் டபுள்யூ. காட்லண்டு. அவர் மேலும் கூறியதாவது, "ரஷ்யரிடம் ஏராளமான ராக்கெட்டுகள் இருப்பதுடன், அவற்றைக் குறி தவறாமல் பிரயோகிக்கவும் ரஷ்யர் கற்றிருக்கின்றனர் என்பதும் தெளிவாகிறது. அமெரிக்காவிடமோ மேலை நாடுகளிடமும் இவ்வித ராக்கெட்டுகள் இல்லை.

அடுத்தபடி மனிதர் இறக்கப்படுவர்

டாக்டர் ஐ. எம். லெவிட் அறிவித்ததாவது:—

அடுத்தபடி, ராக்கெட் சேதப்படாமல் பத்திரமாக இறங்க முயற்சிசெய்யப் படும். பின்பு மனிதருடன் ராக்கெட் சந்திரனைச் சுற்றி வரும்படி முயற்சி நடக்கும். கடைசியாக, சந்திரனில் மனிதன் இறக்கப்படுவான்.

அமெரிக்கா, 1968-ல் சந்திரனில் ஒரு மனிதன் இறக்கக்கூடும். ஆனால் ரஷ்யர் இதில் அமெரிக்கரை முந்திக் கொள்வர்

பிரெஞ்சு பாராட்டு

பாரிஸ், செப் 14—

சந்திரனுடனும் மனிதன் தொடர்பு கொள்வது சாத்தியமாகி விட்டதென்று பிரெஞ்சு டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் பாராட்டப்பட்டது

மேற்கு ஜெர்மன் புகழுரை

பான், செப். 14—

குறித்த நோத்தில் தவறாமல் சோவியத் ராக்கெட் சந்திரனைத் தொட்டுவிட்டது; ரஷ்யருக்கு இது பெருமையே என்று பேராசிரியர் ஆபெர்த் கூறினார்.

மார்க்ஸிஸ-லெனினிஸத்திற்கு வெற்றி

இச் சாதனை மார்க்ஸிஸ-லெனினிஸத்திற்கு பெருமை வெற்றியாகுமென்று கிழக்கு ஜெர்மன் பேராசிரியர் லே கூறினார்.

சோவியத் ஜனாதிபதிக்கு கிழக்கு ஜெர்மன் ஜனாதிபதி ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பினார்

உலகில் சோவியத் விஞ்ஞானமே முதன்மை பெற்று விட்டதென்பதற்கு இது சான்று ஆகுமென்று செக்கோஸ்லேவாகிய செய்தி ஸ்தாபனம் இன்றிரவு அறிவித்தது.

அற்புதம் என்றார் இலங்கைப் பிரதமர்

சோவியத் ராக்கெட் சந்திரனை அடைந்த செய்தியைக் கேட்டு 'அற்புதம்' என்றார் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக.

"சந்திரன் தங்களுக்குச் சொந்தம் என்கின்றனரா ரஷ்யர்? முதலில் போய்ச் சேர்க்க வருக்குத்தான் உரியது" என்றார்.

மங்கோலியப் பிரதமர் பம்பாய் பிரயாணமானார்

பங்களூர், செப். 14—

மங்கோலியப் பிரதமர் எம் ஜாகின் செடென்பால் தனது ஒரு நாளைய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இங்கிருந்து பம்பாய் புறப்பட்டார். மைசூர் நிதிமந்திரி மரியப்பா விமான நிலையத்திற்கு வந்து வழியனுப்பி வைத்தார் புறப்படுவதற்குமுன்பாக மங்கோலியப் பிரதமர் ஹிந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை, டெலிபோன் தொழிற்சாலை, மைசூர் அரசாங்கத்தின் குடிசைத் தொழில் கலை பொருட்காட்சி நிலையத்திற்கு விஜயம் செய்தார்.

லாவோஸ் தகராறைத் தீர்க்க சர்வதேச மகாநாடு கூட்டுக!

சோவியத் சர்க்காரின் ஆலோசனை

மாஸ்கோ, செப். 14—

லாவோஸ் தகராறைத் தீர்த்து வைக்கவும், அங்கு சுமுக நிலைமை ஏற்படுத்தவும், எவ்வித தாமதமுமின்றி ஒரு சர்வதேச மகாநாடு கூட்டவேண்டுமென்று சோவியத் சர்க்கார் யோசனை கூறியிருப்பதாக டாஸ் செய்தி கூறுகிறது.

1954-ம் வருடத்தில் ஜெனிவா மகாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், மக்கள் சீனா, மற்றும் 4 இந்தோ சீன ராஜ்யங்களும் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்படவேண்டுமென்றும் ரஷ்யா கூறுகிறது.

லாவோஸில் சர்வதேசக் கண்காணிப்பு, கட்டுப்பாடு கமிஷன் தனது வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாதபடி நாச வேலை செய்தது மேற்கத்திய நாடுகள் தான் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

லாவோஸ் தகராறில் குறுக்கிட ஐ. நா. பாதுகாப்பு சபையானது ஒரு சப்-கமிட்டியை அமைத்ததானது ஐக்கிய நாடுகள் சபையின் சாஸனத்திற்கே விரோதமானதாகும், மீறியதாகும் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

இந்தோ சீனாவின் சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்தக் கூடிய அஸ்திவாரம் ஜெனிவா ஒப்பந்தத்தில் இருப்பதால், அதன் அடிப்படையிலேயே இப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்றும், தீர்வுகாண முடியுமென்றும் ரஷ்யா கருதுகிறது.

சர்வதேச கண்காணிப்பு கன்ட்ரோல் கமிஷன் தனது வேலைகளைப் பற்றியும், அமைதி நிலவ அது கூறிய ஆலோசனைகளையும் நடவடிக்கைகளைப் பற்றியும் இந்த மகாநாட்டு முன் வைக்க வேண்டுமென்றும் ரஷ்யா யோசனை கூறியுள்ளது.

சந்திரன் யாருக்கு உரியது!

மாஸ்கோ, செப். 14—

சந்திரனில் சோவியத் ராக்கெட் போய்ச் சேர்ந்துவிட்டதால் சந்திரன் ரஷ்யருக்குச் சொந்தமாகிவிட்டதாக பாத்யதை கொண்டாடப் போவதில்லையென்று சோவியத் விஞ்ஞானிகள் இன்று அறிவித்தனர்.

பிரதமர் நேருவுக்கு காபூல் விமான நிலயத்தில் வரவேற்பு

காபூல், செப். 14—

ஆப்கன் சர்க்காரின் அழைப்பை ஏற்று, 4 நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நேரு இன்று காலை 11-30 மணிக்கு இங்கு வந்து சேர்ந்தபோது, அவருக்கு விமான நிலயத்தில் உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

ஆப்கனிஸ்தான் பிரதம மந்திரி சர்தார் முகம்மது தாவுத்கானும், இதர மந்திரிகளும், வெளிநாட்டுத் தூதவர்களும், ஆப்கன் மன்னரின் பிரதிநிதியும் நேருவை விமான நிலயத்தில் வரவேற்றனர்.

திருமலை நாயக்கர் மஹாலிலிருந்து கோர்ட்டுகளை வெளியேற்றுக

மதுரையில் ராஜாஜி கோரிக்கை

மதுரை, செப். 14—

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதும், சிறப்பான சிற்ப வேலைப்பாடுகள் கொண்டதுமான மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் தற்பொழுது மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களின் கோர்ட்டுகளை யெல்லாம் வைத்திருப்பதின் மூலம் அது துஷ்பிரயோகப்படுத்தப் படுகிறது, என்று ராஜாஜி இன்று இங்கு கூறினார்.

இன்று மாலையில் திருமலை நாயக்கர் மஹாலில் மதுரை 'பார் அசோஸியேஷன்' (வழக்கறிஞர் சங்க) கூட்டத்தில் பேசுகையிலேயே ராஜாஜி மேலே குறிப்பிட்டவாறு கூறினார்.

"வழக்குகளை நடத்தும் இழிவான காரியத்திற்காக இந்த மஹால் உபயோகப் படுத்தப்படுவது கண்டு நான் வேதனையடைகிறேன். கோர்ட்டுகள் அங்கிருந்து வெளியேற்றப்படவேண்டும். ஒரு நினைவுச்சின்னமென்ற முறையில் அதனுடைய அந்தஸ்து நிலைநிறுத்தப்பட வேண்டும். தற்பொழுது கோரமான தடுப்புகளெல்லாம் போடப்பட்டு ஒரு சந்தைக் கடையைப் போல் அது காட்சியளிக்கிறது. கோர்ட்டுகள் தனியாகக் கட்டப்படுவதற்குக் கொஞ்சம் பணம் ஒதுக்கியாக வேண்டும்," என்றும் ராஜாஜி கூறினார்.

இந்தோனேஷிய கலகப் படையினர் சரணாகதி

ஜகர்த்தா, செப். 14—

இந்தோனேஷிய சர்க்காருக்கு எதிராகக் கலகம் செய்துவந்த வகுப்பவாத தாருல் இஸ்லாம் படைத் தலைவர் பஹார் பட்டாவிய 1100 சிப்பாய்களுடன் சரணாகதி அடைந்துவிட்டதாக அந்தாரா செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

டெலிவிஷன் நிகழ்ச்சியை ஜனாதிபதி தொடங்கிவைப்பார்

நாளை டெல்லியில் நடைபெறும்

புதுடெல்லி, செப். 14—

இந்தியாவின் முதல் டெலிவிஷன் நிகழ்ச்சியை நாளை ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் துவக்கி வைக்கிறார். இந்நிகழ்ச்சியை கண்டு களிக்க டெல்லி நகரிலும் சுற்றுப்புறத்திலும் பன்னிரண்டு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட டெலிவிஷன் செட்டுகள் பொருத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

டெல்லி கிராமப்புறங்களில் ஆறும். நகரப்புறத்தில் எட்டும் பொருத்தப்படுமாம். (பி.டி.ஐ)

பஞ்சாபில் இ.எம்.எஸ். சுற்றுப்பிரயாணம் துவக்கம்

ஜலந்தர், செப். 14—

கேரள முன்னாள் முதலமைச்சர் தோழர் இ. எம். எஸ். நம்பூதிரிபாட் பஞ்சாபில் தன்னுடைய 4 நாள் சுற்றுப்பிரயாணத்தை இன்று துவக்கினார்.

அவர் இன்று இங்கு பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில், வருகின்ற இடைத்தேர்தலில் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெறும் என்று தான் கருதுவதாகக் குறிப்பிட்டார்.

இந்திய-சீன எல்லைப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடுகையில், இந்திய, சீனப் பிரதம மந்திரிகள் சமாதான பூர்வமான பேச்சுவார்த்தைகள் மூலம் எல்லைத் தகராறுக்குத் தீர்வுகாண வேண்டுமென்று குறிப்பிட்டார்

இந்தியாவின் மீது யாராவது படையெடுத்து வந்தால் கம்யூனிஸ்ட் கட்சி அந்த ஆக்ரமிப்பை எதிர்த்துப் போராடுவதில் இந்திய சர்க்காருக்கு முழு ஆதரவும் அளிக்கும் என்றும் இ எம் எஸ். குறிப்பிட்டார்.

அமைதியை நிலைநாட்ட எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும்

கேரள கவர்னர் வேண்டுகோள்

திருவனந்தபுரம், செப். 14—

கேரள கவர்னர் டாக்டர் பி. ராமகிருஷ்ணராவ் வெளியிட்டுள்ள அறிக்கையில், ராஜ்யத்தின் தேர்தல்கள் நடைபெறுவதற்கு மிகவும் அத்தியாவசியமான சமாதான பூர்வமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் பொதுமக்களின் எல்லாப் பகுதியினரும் கேரள சர்க்காருடன் ஒத்துழைப்பார்கள் என்று மனப்பூர்வமாக நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பிரகடனம் வெளியாவதற்கு முன்பிருந்த அசாதாரணமான நிலைமை முற்றுப் பெற்று, சகஜ நிலைமை பொதுவாக ஏற்பட்டிருப்பினும் ஒன்றுக்கொன்று எதிரான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுவர்களுக்கிடையே இடையிடையே பலாத்கார சம்பவங்கள் நடைபெறுவது குறித்து வருந்துவதாகக் கூறினார்.

சர்க்கார் இது சம்பந்தமாகக் கண்காணிப்பை தீவிரப்படுத்துவது மன்றி, ராஜ்யத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் குலைப்பதற்கு செய்யப்படும் முயற்சிகளையும் செயல்களையும் உறுதியுடன் அடக்குவார்கள் என்றும் கவர்னர் கூறினார்.

அதே சமயத்தில் அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும், பொதுமக்களும், சட்டமும் ஒழுங்கும் குலைவதைத் தடுக்கத் தவறுவதாக சர்க்காரின்மீது பழிபோடாமல், சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு அவர்களின் பங்கையும் ஆற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

கெடுபிடி நிலைமையைத் தணிப்பதற்கு எத்தகைய கூட்டு நடவடிக்கையிலும் இறங்குவதற்கு அண்மையில் நடைபெற்ற மகாநாட்டில் அரசியல் கட்சித் தலைவர்கள் ஒத்துக் கொள்ளாவிடினும் அவர்கள்வாக்குறுதி அளித்தபடி பலாத்கார சம்பவங்கள் நிகழாதபடி அவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களையும் அனுதாபிகளையும் கட்டுப்படுத்துவார்களென்று நம்புகிறேன் என்று ராமகிருஷ்ண ராவ் கூறினார்.

பிறகு, ஆகஸ்ட் 1 முதல் செப்டம்பர் 10 வரை 235 சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன வென்றும், எல்லா சம்பவங்கள் சம்பந்தமாகவும் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அண்மையில் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாடு தன்னுடைய சொந்த முயற்சியின் பேரில் கூட்டப்பட்டதென்றும், முன்னாள் முதலமைச்சர் (இ. எம் எஸ்) கூறியதற்கேற்ப நான் கூட்டியதாகக் கூறப்படுவது சரியல்லவென்றும் கவர்னர் கூறினார்.

ராஜமகேந்திரபுரத்திற்கு வெள்ள அபாயம்

ஹைதராபாத், செப். 4—

கோதாவரி நதி வெள்ளத்தால் ராஜமகேந்திரபுரம் டவுனுக்கு அபாயம் ஏற்படும்போலிருக்கிறது. பள்ளமான பிரதேசங்களிலிருந்து ஜனங்கள் வெளியேற்றப்பட்டு, நிவாரண முகாம்களில் வசிக்கின்றனர்.

மந்திரி மகன் கம்பெனிக்கு 72 லக்ஷம் ரூபாய் நன்கொடை!

பம்பாய் காங்கிரஸ் ஆட்சியில் பொது நிலம் பறிபோகிறது

பம்பாய், செப் 10—

ஊழல்களிலேயே ஊறிப்போனவைகள் காங்கிரஸ் சர்க்கார்கள் என்பதற்கு பம்பாயிலிருந்து ஒரு உதாரணம் கிடைத்திருக்கிறது. பம்பாயில் அந்தேரி—அம்போலி என்ற பகுதியில் சர்க்காருக்கு சொந்தமான 135 ஏக்கர் நிலத்தை, வீடுகட்டுவதற்காக ஒரு தனிப்பட்ட கம்பெனிக்கு பம்பாய் சர்க்கார் விற்றிருக்கிறது. இந்தப் பிரைவேட் கம்பெனிக்குப் பெயர் ஷா வீடு கட்டும் கம்பெனி. இதில் மத்திய சர்க்கார் மந்திரி ஒருவரின் மகனும் டங்குதாரராக இருக்கிறார் என்று தெரிகிறது.

ரூ. 72 லக்ஷம் லாபம்

இந்தப் பகுதியில் ஒரு சதுர கெஜ நிலத்துக்கு 15 ரூபாய் மதிப்பாக இருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது 135 ஏக்கர் நிலத்துக்கு 6 லட்சத்து 53 ஆயிரத்து 400 சதுர கெஜமாகிறது. இதை சதுர கெஜத்துக்கு 4 ரூபாய் வீதம் விற்றிருக்கிறார்கள். 15 ரூபாய் நிலத்தை 4 ரூபாய்க்கு விற்றதால் 72 லக்ஷம் ரூபாய்வரையிலும் அந்த மந்திரி மகன் கம்பெனிக்கு ஆதாயம்.

ஜன நெருக்கமுள்ள அந்த இடத்தில் இனி வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டால், கேட்ட வாடகை கொடுக்க அட்வான்ஸோடு எத்தனையோ பேர் காத்திருப்பார்கள். லாபமோ லாபம்! கொள்ளையோ கொள்ளை!

98 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 25 லட்சம் ரூபாய்க்கு வாங்கிய இந்த மந்திரி மகன் கம்பெனிக்கு, எடுத்தஎடுப்பிலேயே எவ்வித முதலும் போடாமலேயே 72 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது.

முறைதானா?

சர்க்கார் ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. அதற்கு மத்திய சர்க்காரோ, ராஜ்ய சர்க்காரோ அந்த இடத்தை உபயோகப்படுத்தினால் என்ன? இராஜ்ய சர்க்காரிடம் பம்பாய் கார்ப்பொரேஷன் அந்த இடத்தைக் கேட்டதாகவும், அந்த இடம் மத்திய சர்க்காருக்கு மிகவும் தேவை என்று ராஜ்ய சர்க்கார் கைவிரித்து விட்டதாகவும் தெரிகிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்றும் சோஷலிஸ பாணி என்றும் வாய்கிழியப்பேசுகிற காங்கிரஸ் அமைச்சர்கள் கூட்டுறவு வீடுகட்டும் சொசைட்டிகளுக்கு இந்த இடத்தை வழங்கினால் என்னவென்று ஒரு செல்வாக்குள்ள மத்திய சர்க்கார் மந்திரி மகனின் சொந்த விஷயம் இதுஎன்று கலெக்டரும் சரி, ரெவுனியூ அமைச்சரும் சரி தலையிட இஷ்டப்படவில்லையோ என்று பம்பாய் மக்கள் பரபரப்புடன் பேசிக்கொள்கிறார்கள் என்று பிளிட்ஸ் பத்திரிகை கூறுகிறது.

சோவியத் ராக்கெட் குறித்து நேரு

புதுடெல்லி, செப். 14—

ஆப்கானிஸ்தானத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் பிரதமர் நேருவுக்கு விமான நிலயத்தில் வழியனுப்பு உபசாரம் நடந்தது. ரஷ்ய ராக்கெட் பற்றிக் கேட்டபோது "இது ஒரு மகத்தான செய்தி என்பதில் சந்தேகமில்லை. சந்திரன் இன்றும் தொடர்ந்து வாழும்" என்று நம்புகிறேன் என்றார்.

முன்னாட்களில் சோதிடர்கள் சந்திரன் மனித விதியை பாதிப்பதாகச் சொல்வார்கள். இப்போது சந்திரன் கதி பாதிக்கப்படுகிறது என்றார்.

வானொலி

சென்னை-1

17—9—59

காலை முதல் ஒலிபரப்பு

6-55 மங்கள இசை 7-00 ...பாடல்கள் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் வானிலை அறிவிப்பு 7-15 தமிழில் செய்தி, 7-30 எம். என். பாலதசாம்பாள் பாட்டு 8-00 மதுர கீதம், 8-15 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 மஹிளாமண்டலி 1-30 கானமஞ்சரி 1-40 ஹிந்தியில் செய்தி 1-50 இசை (...) 2-00 தமிழில் செய்தி 2-10 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

மாலை மூன்றாவது ஒலிபரப்பு

5-30 கே. என். ஜகந்நாதன் நாகஸ்வரம் 6-05 பிராந்தியச் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் (திருச்சி அஞ்சல்) 7-15 தமிழில் செய்தி 7-30 சமுதாய நீதி பேச்சு (திருச்சி அஞ்சல்) 7-45 ராகம், தானம், பல்லவி (திருச்சி அஞ்சல்) 8-30 Radio News Reel (Realay from Delhi) 8-40 வாத்ய இசை 8-45 ...மாலை 9-00 எஸ். சிதார வீணை 9-30 அகில பாரத ...நிகழ்ச்சி 10-00 இசை ...தம் 10-30 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

17—9—59.

காலை முதல் ஒலிபரப்பு

7-00 இசைக்கதிர் ...பாடல்கள் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள்; 7-15 தமிழில் செய்தி, 7-30 கோவை வி. பார்வதகுமாரி பாட்டு 8-00 ஆங்கிலத்தில் செய்தி 8-15 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1-00 கதம்பம் 1-40 ஹிந்தியில் செய்தி 1-50 ஏ. கே. சி. நடராஜன் கிளாரினெட் 2-00 தமிழில் செய்தி 2-10 கோவை வி. பார்வதகுமாரி பாட்டு 2-45 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

மாலை மூன்றாவது ஒலிபரப்பு

4-45 விவித பாரதி கர்நாடக சங்கீதநிகழ்ச்சி (பம்பாய் அஞ்சல்) 5-45 இசைப்பயிற்சி 6-00 அறிவிப்புகள் 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தமிழில் செய்தி, 7-30 சமுதாய நீதி பேச்சு 7-45 ராகம், தானம், பல்லவி டி. ஆர். கிருஷ்ணமாச்சாரி வீணை 8-30 டெல்லி அஞ்சல் 8-40 திரைப்பட இசை 9-00 ஆங்கிலத்தில் செய்தி 9-15 சுபத்த சங்கீதம் 9.30 அகில பாரத இலக்கிய நிகழ்ச்சி (தமிழ்) 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிட்டவர் என். இருஷ்ணசாமி ஆசிரியர்; ப. ஜீவானந்தம். முகவரி: 32, பிராட்வே, சென்னை-1.
Janasakthi Broadway, Madras-1.